173


உ

# செந்தமிழ்ச் செல்வி




சிலம்பு-கச] யுவ—கார்த்திகை [பரல்-ச


## திருஞானசம்பந்த அடிகள் தேவாரம்

### திருவெண்ணி

மூத்தானை மூவுலகுக் கொரு மூர்த்தியாக
காத்தானைக் கனிந்தவரைக் கலந்தா ளாக
ஆர்த்தானை யழகமர்வெண்ணி யம்மான் றன்னை
ஏத்தாதா ரென்செய்வா ரேழையப் பேய்களே.

பதவுரை:—

மூத்தானை—உலகில் உயிர்ப் பொருள்களும் உயிரில்பொருள்களும் தோன்றுதற்கு முன்னே இருக்கிறவனும்

மூவுலகுக்கு ஒரு மூர்த்தியாய்க் காத்தானை—நில உலகம் பாதாள உலகம் வானவருலகம் என்னும் மூன்று உலகங்களுக்கும் ஒரே முழுமுதற் கடவுளாயிருந்து தான்வேண்டு முருவங்கொண்டு காத்து ஆள்கிறவனும்

கனிந்தவரைக் கலந்து ஆளாக ஆர்த்தானை—தான் செய்யும் பேரருட் செயல்களை அறிந்து அகங் குழைந்துருகி அன்பு செய்கிறவர்களிடம் தானும் அன்புசெய்து அவர்களோடு இரண்டறக் கலந்து அவர்களைத் தன் அடிமைகளாகக் கொண்டு பேரின்பம் நுகரச்செய்கிறவனும்

அழகு அமர் வெண்ணி அம்மான்தன்னை—அழகு பொருந்திய திருவெண்ணிப் பதியில் திருக்கோயில் கொண்டு வீற்றிருக்கின்ற தந்தையுமாகிய சிவபெருமானை

ஏத்தாதார்—அன்பு செய்து வாழ்த்தி வணங்காத மக்கள்

ஏழை—(இறைவனுடைய இலக்கணத்தையும் அவன் உயிர்கள் உய்யும் பொருட்டு இடைவிடாது செய்துவரும் பேரருட்டிறத்தையும்) சிறிதும் அறியாதவர்கள்

அப்பேய்கள்—(அறிவின்றி போகநுகர்வுகளின் பொருட்டு ஓயாமல் அலைந்து திரியும்) பேய்களுக்கு ஒப்பான அப்பேதைமக்கள்

என்செய்வார்—(ஆணவ மலத்தினு லுண்டாகும் தங்கள் அறியாமை காரணமாக இறைவனை மறந்து உலக போக நுகர்ச்சிகளில் ஓயாது உழன்று திரிதலின்றி) வேறு யாது செய்யவல்லார்? (ஒன்றுஞ் செய்ய வல்லரல்லர் என்றபடி)

விளக்க வுரை :—

மூத்தானை—"மூத்தவனாய் உலகுக்கு முந்தினானே" என்று திருநாவுக்கரசு அடிகள் திருச்சோற்றுத்துறைத் தேவாரம் முதலாவது பாட்டிற் கூறியிருத்தல் காண்க.

மூவுலகுக் கொருமூர்த்தியாய்—மூவுலகங்களுக்கும் ஒரே முழுமுதற் கடவுளா யிருந்து மூவுலகங்களிலுள்ள உயிர்களுக்கும் தனது தனிநிலையில் நின்றால் அவை அறியமாட்டா ஆகலின் எந்த எந்த உயிர் தான் எந்த உருவத்தில் தோன்றினால் தன்னை அறியுமோ அந்த அந்த உருவில் தோன்றி நின்றும் (மறைந்து நின்றும்) காக்கின்றான் ஆதலின் மூவுலகுக்கொரு மூர்த்தியாய் என்றார்.

கனிந்தவரைக் கலந்து ஆளாக ஆர்த்தானை—இறைவன் தான் உயிர்கள் பொருட்டுச் செய்யும் பேரருட் செயலை நினைந்து அகங் குழைந்துருகி நன்றி அறிதலுடையவராய் அன்பு செய்யாதவர் தன்னுடன் இரண்டறக்கலக்கவும் தன்னால் அடிமையாக ஆளப் படவும் தகுதி யில்லாதவர் ஆதலின் அடிகள் கனிந்தவரைக் கலந்து ஆளாக ஆர்த்தார் என்றார். "அன்போடுருகி அகங்குழைவார்க்கன்றி என்பொன் மணியினை யெய்த வொண்ணாதே" என்று திருமந்திரம் கூறுதல் காண்க (272).

கனிந்தவர்—கனியைப்போல அன்பால் மனம் பழுத்துப் பக்குவப் பட்டவர்.

ஆர்தல்—நுகர்தல்.

ஆர்த்தல்—நுகர்வித்தல்; பிறவினை. ஆர்த்தான்—பேரின்பம் நுகரும்படி செய்கிறவன்; வினையாலணையும் பெயர். தெளிவு பற்றி ஆர்த்தான் என இறந்தகாலத்தில் கூறினார்.

ஏழை—என்பது பொருளில்லாதவர், வறியவர். அச் சொல் இங்கே அறிவில் வறியவனைக் குறிக்கிறது. இறைவன் இருத்தலையும் அவனுடைய இலக்கணத்தையும் அறியாதவர்.

அப் பேய்—உலகவாழ்வில் இடைவிடாது ஐம்புலம் நுகர்தலிற் பேரவாக் கொண்ட மனத்தவர்கள் தங்கள் வாழ்வு இயல்பான முறையில் முடிதற்குமுன் தற்கொலையால் அல்லது பிறரால் வலுவிற் கொல்லப் படுதலால் உயிர்நீப்பின் அந்நுகர்ச்சிகள் கிடைக்கப் பெறாது அவற்றையே நினைந்து பேயுலகில் (பைசாச புவனத்தில், astral world) போய்த் திரிகின்றார்கள். இறைவனை நினைந்து அவனுக்கு அன்புசெய்து உலகில்வாழும் அறிவில்லாதவர்களும், அப் பேய்களைப்போல் ஓயாது உலக போகநுகர்ச்சிகளில் உழன்று திரிகிறவர்கள் ஆதலின் அவர்களைப் பேய் என்று அடிகள் கூறியருளினர். இக் கருத்தை யுட்கொண்டு சுந்தரமூர்த்தி அடிகள் "நாயேன் பலநாளு நினைப்பின்றி மனத்துன்னைப் பேயாய்த் திரிந்தெய்த்தேன்" என்று திருவெண்ணெய் நல்லூர்ப் பதிகம் 2 வது பாட்டிற் கூறி அருளினர். மாணிக்கவாசக அடிகள் செத்திலாப்பத்து ஏழாவது பாட்டில் "நமச்சிவாயவென் றுன்னடி பணியாப் பேயனாகிலும்" என்று கூறியருளினர்.

என்செய்வார் என்பது—என்ன செய்யவல்லார் என்னும் பொருள் பட நின்றது. இறைவனை ஏத்தாது உலகத்தைப்பற்றி நிற்றலன்றி வேறொன்றுஞ் செய்யவல்ல ரல்லர் என்று அடிகள் அவர்கள்மேல் இரங்கிக் கூறியருளினர்.

இப்பாட்டில் 'மூத்தானை' என்றதனால் இறைவனுடைய படைத்தற் றொழிலும் 'காத்தானை' என்றதனால் காத்தற் றொழிலும், "ஆர்த்தானை" என்றதனால் அருளற் றொழிலும் கூறப்பட்டன. உடலை அழித்தலும் உயிரை மறைத்தலும் காத்தலுக்காகச் செய்யப்படுதலின் அழித்தற் றொழிலும் மறைத்தற் றொழிலும் காத்தலிலடங்கும். தனித்து நிற்கும் ஆற்றலின்றி உலகமாகிய அசத்தைச் சார்ந்து அசத்தாயும், சிவமாகிய சத்தைச் சார்ந்து சத்தாயு மிருக்கு மியல்புடைய மக்கள், இறைவன் தங்கள் பொருட்டுச் செய்யும் ஐந்து பேரருட் செயல்களையு மறிந்து அவனை வழிபடாதிருந்தால் உலக வாழ்வில் ஆற்றலில்லாதவர்களாய்த் துன்புறுவார்கள் என்பது இப்பாட்டிற் கூறப்பட்ட உண்மையாகும்.

—மா. வே. நெல்லையப்பபிள்ளை.

176

# புதுக் கவிகள் - Original Poetry

## "மழையை வருகென வழுத்தி வேண்டல்"

[வேலணைக்கிழார், க. வேந்தனார். (நாகேந்திரம் பிள்ளை.)]

நேரிசை வெண்பா.

செம்பொருளின் பேரருளே தீந்தமிழின் வைப்பகமே
நம்பெழிலின் கண்ணே நலவமுதே—யெம்புரப்பான்
வானிருந்து மண்வருஉம் மாமழையே நீமறந்தாற்
கோனிருந்து மென்னபயன் கூறு. 1

மாமழையே நீமறந்தால் மண்ணகத்தா ரென்செய்வார்
வாமழையே நாங்களிவண் வாழ்ந்திடவே—பூமழையார்
வானோர்க்கும் நீமறந்தாற் செல்லா வழிபாடென்
ஏனோர்க்கு மாகும்பே றிங்கு. 2

ஆக்களும் நீர்வேட் டலைகின்ற நன்மரங்கள்
பூக்களு மேந்தாது பொற்பழிந்த—ஏக்கமுடன்
மக்களுஞ் சிந்தை வருந்திநனி வாடுகின்றா
ரிக்கணமே வாமழைநீ யிங்கு. 3

நீர்வா ழுயிர்களெலாம் நெட்டுயிர்த்துச் சோர்கின்ற
சீர்வா ழிடங்களெலாந் தீயுண்ட—ஏர்வாழ்த்தும்
மங்கலப் பாட்டொழிந்த மன்னுபுக ழீட்டொழிந்த
பொங்கலுடன் வாமழைநீர் போர்த்து. 4

பார்வேந்தர் தம்முட் பகைக்குமிஞ் ஞான்றினிலே
ஏர்வேந்தர் தம்முடன்நீ யேற்றிகலில்—சீர்வேந்த
மன்னி யுலகினில் வாழுயிர்கட் கென்றுப்புத்
துன்னும் மழையேவா தொக்கு. 5

நீர்தரு கூபமெலாம் நீள்ஞாயிற் றின்கதிர்கள்
கூர்தரு சூட்டின் குடியாய—ஏர்தருநற்
சேய்நிலங்க ளெல்லாஞ் செழுமையற்று வன்கானல்
பாய்நிலங்கள் வாமழைநீ பார்த்து. 6

பசும்புற் றலையில்லைப் பைங்கிளிக ளார்ப்பில்லை
விசும்பிற் கரத்தலின்நீ மென்மழையே—நுசும்பொடிய
ஆய்தொடியார் நின்று அகல்வானின் நின்வரவு
ஆய்தருவார் வாமழைநீ யார்ந்து. 7

நீர்வேட்கை யான்மெலிந்து நின்றுருகுந் தன்பேட்டி
னூர்வேட்கை பெற்றிடா வஞ்சேவல்—போர்வேட்டு
வானோக்கி நின்னையிவண் வாவென்று கூவுவது
தானோக்கி வாமழைநீ தாக்கு. 8

உழைபொருவு கண்சேப்ப வொண்வளைக ளார்ப்ப
கழைபொருவு தோளல்லார் காழ்த்த—விழைவுடனே
தங்கொழுநற் புல்லுந் தனியின்ப முன்னாலே
பங்கமுற்ற வாமழைநீ பார்த்து. 9

புட்களொலி யில்லைப் புதியபயி ரீங்கில்லைக்
கட்கணளி யில்லைக் கலையில்லைச்—சொட்டுநறுந்
தேனில்லைப் பாலில்லைச் செய்ய பொருளில்லை
வானில்லை மாமழைநீ வா. 10

உன்னை யொழிய வுலகினர்க் கென்துணையாம்
மன்னை யனைய வளர்மழையே—மின்னி
முழங்கியொண் வான்வழிந்து மூதறிஞர் போற்ற
வழங்கியருள் மண்ணகத்தை வந்து. 11

மண்ணகத்தே நிற்கும் மரங்களெலாம் நிற்காண்பான்
விண்ணகத்தை நோக்கி மிகவிழைந்தே—யெண்ணகத்து
ளெய்தாத நாட்களெலா மெல்லொறுக்க நோற்கின்ற
பொய்யாத மாமழைவா போற்று. 12

இன்னிசை சிந்தியலா லேற்குநல மாமழையுன்
வன்னிசை யாசிடையாய் மன்னாது—மின்னிசைத்துப்
பஃறொடையாய் நீர்தந்திப் பாரகத்தைப் போற்றாத
சிஃறகையே நிற்குறளாம் செப்பு. 13

நேரொன்ற மன்னர் நிரையொன்ற மன்னுயிர்கள்
சீரொன்ற வானோர் திருத்தளையக்—காரொன்றி
மாமழையே நீவந்து மண்ணகத்தை ஈந்தருள்வாய்
பூமழையே பெய்யப் புகழ்ந்து. 14

வானகம் வெண்பாவின் மண்ணிற் கலிப்பாவும்
ஊனகம் வஞ்சி யுருப்பாவும்—தேனகமாய்
ஆசிரியப் பாவி யகல்வான் முகடெங்கும்
மாசிரிய வாமழைநீ மற்று. 15

சிந்தா மணியே திகழ்சிலம்பிற் கார்முகிலாய்
வந்தாரின் நின்னைமணி மேகலையார்—கொந்தார்
வளைபூண்ட கைகூப்பி வண்குண் டலமேர்
துளைபூண்ட யாழிசைப்பார் தொக்கு. 16

நற்றிணை யற்றுநல் குறுந்தொகைநா ணடைந்தார்
கற்றிணை யற்றார் கலித்தொகையா—லுற்றபரி
பாடற் ககம்புறம்ப திற்றுப்பத் தைங்குறு நூ
றூடற்கார் வாமழைநீ யாய்ந்து. 17

ஞாயிற்றின் வெங்கதிரால் நானுமெழிற் கானலைக்கண்
டாயிற்று நீரென் றகமகிழ்ந்து—போயிற்ற
வுள்ளமுடன் மாக்க ளுயிர்சோர்ந்து வாடுதலை
யுள்ளிவா மாமழைநீ யுற்று. 18

எழுத்தாலான் சொற்பொருளி னின்பாலே யாத்தல்
கொழுத்தலா லற்றணி கூடாது—விழுத்தாய
மண்ணக மோங்கி வளமடைய மாமழையே
விண்ணகம்விட் டேவா விரைந்து. 19

மண்களிக்க வான்பயிர்கள் மன்னியுற மங்கைநலார்
கண்களிக்க நான்மறையோர் கைகூப்ப—வுண்களித்தே
யாவினங்கள் வாழ வருள்மன்னன் கோலோங்க
மேவியருள் மாமழையே மிக்கு. 20

# இலக்கணமும் இலக்கியமும்
# LANGUAGE AND LITERATURE

## மூலமும் விளக்க உரையும் குறுந்தொகை

[இலந்தையடிகள் வித்துவான் இரா. சிவ. சாம்பசிவன்]

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

(முன் கஅக-ம் பக்கத்தொடர்ச்சி)

### மருதம்

பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகன், தலைவி மாறாத்துனி யுற்றுப் பிணக்கங் கொண்டு நிற்ப, அவள் ஊடலைப் பல்லாற்றானும் தணிக்க முயன்றும் பயனின்மை கண்டு வருந்தித் தன் நெஞ்சொடு கூறியது.

பாணர் பாடியது

19. எவ்வி யிழந்த வறுமையர் பாணர்
பூவில் வறுந்தலை போலப் புல்லென்
றினைமதி, வாழிய நெஞ்சே; மனைமரத்
தெல்லுறு மௌவல் நாறும்
பல்லிருங் கூந்தல் யாரளோ நமக்கே.

என்பது உணர்ப்புவயின் வாரா வூடற்கண் தலைமகன் சொல்லியது.

பதவுரை :—எவ்வி இழந்த வறுமையர் பாணர்—'எவ்வி' என்னும் வேளை இழந்து வறுமையுற்றவர்களான பாணர்களின், பூ இல் வறுந்தலை போல—பொற்பூ அணியப் பெறாத வறிதாய தலைபோல, புல்லென்று இனைமதி—பொலிவிழந்து அற்பமாக வருந்துகிறாய், நெஞ்சே வாழிய—என் மனமே, நீ வாழ்வாயாக; மனை மரத்து எல்லுறு மௌவல் நாறும்—வீட்டின் பக்கத்து மரத்தில் படர்ந்துள்ள முல்லையின் விளக்கமுற்ற மலர்கள் வாசனை கமழும், பல் இரும் கூந்தல் யாரளோ நமக்கே—பலவாகிய கரிய கூந்தலையுடையார் யாவரோ நம்மாட்டு இரக்கங் கொள்வாருளர்? (ஒருவருமில்லை).

எவ்வி என்பான் வரையாது கொடுக்கும் வள்ளல். அவனை இழந்ததால் பாணர் வறுமையுற்றனர். அவன் இருக்குங்கால் அவன் பால் பாணர் சென்று தம் திறல் காட்டிப் பொற்பூ பெறுவர். அவன் இல்லை யாதலின் பாணர் பொற் பூ பெறாது வறிதாய தலையோடு திரிகின்றனர். "ஓம்பா வீகை மாவேள் எவ்வி"—(புறம் 24) பாணர்—யாழுடன் இசைபாடுவோர்) இனைதல்—வருந்துதல் மதி—முன்னிலை யசைச்சொல். வாழிய—வியங்கோள் வினை முற்று. எல்—விளக்கம். 'எல்லினன் பெரிதென'—என்பதும் காண்க. மௌவல்—முல்லை மொட்டு மௌவல் நாறும் பல் என்றும் இருங் கூந்தல் என்றும் கொள்ளலாம். யாரளோ என்பதில் ஓகாரம் இரக்கமும் எதிர் மறையும் குறித்தது, நமக்கு—உருபு மயக்கம் (நம்மிடத்து).

மேற்கோள் விளக்கம்.

1. "எவ்வி யிழந்த வறுமையர் பாணர்—பூவில வறுந்தலை போலப் புல்லென்று" என்பது கருப்பொருள் உவமமாய் வந்தது" என்பதற்கு மேற்கோள் —(தோல்—அகத்—பக். 149

2. "எவ்வி யிழந்த வறுமையர்"—'கற்பிற் புலந்தது' என்பதற்கு மேற்கோள் —(தோல்—கற்பி—பக். 726)

3. 'எவ்வி யிழந்த வறுமையர்'—
"இரும்பாண் ஒக்கற் றலைவன் பெரும்பூட் போரடு தானையெவ்வி" —(புறம்—233—5—6)

'எவ்வி' —(புறம்—24, 18; 202, 14,)

1. 'வாய்வாள், எவ்வி வீழ்ந்த செருவிற் பாணர்'
2. 'பயங்கெழுவைப் பிற்பலவே லெவ்வி'
3. 'வாய்வாள் எவ்வி'
4. 'பொலம்பூ ணெவ்வி' —(அகம் 115, 126, 266, 366)

4. 'பூவில் வறுந்தலை'—'போதில் வறுங்கூந்தல்' —(கலி. 95-80-23)

5. "தன்னவன் தணந்த காலைப் பூமனும் புனைதலின்றி" —(சீவக. 1598)

6. "எவ்வியிழந்த......................நமக்கே"—"என்பது துன்பத்துப் புலம்பலாம்; என்னை? தானே துன்புறுகின்றாளாகத் தலைமகன் உரைத்தமையின்" —(தோல்—மெய்—பக் 61)

7. 'கைவிடின் அச்சமும்' என்ற சூத்திரத்திற்கு "தலைவி தான் உணர்த்தவும் உணராமல் தன்னைக் கைவிட்டுப் பிரியில் தான்

அவளை நீங்குதற்கு அஞ்சிய அச்சத்தின் கண்ணும் தலைவற்குக் கூற்று நிகழும்; அஃது உணர்ப்புவயின் வாரா வூடலாம்:—

"எவ்வியிழந்த..................நமக்கே" இதினுள் அவளையின்றி வருந்துகின்ற நெஞ்சே, அவள் நமக்கு யாரெனப் புலத்தலன்றி ஆண்டு நின்றும் பெயர்தல் கூறாமையிற் கைவிடின் அச்சமாயிற்று"

—(தொல்—கற்பி—பக். 623)

1. 'வறுமையர் பாணர்'—'வறுமை யாழ்ப்பாணர்'

—பிரதிபேதம்

2. 'யாரளோ நமக்கே'—'யாருளர் நமக்கே'—பிரதிபேதம்

"மனைமரத் தெல்லுறு மௌவல்"—

"இல்வளர் முல்லையொடு மல்லிகை" சிலப். 4-27

"மனை வளர் முல்லை" சிலப். 13-120.

"இல்லெழு முல்லையொடு மல்லிகை மயங்கிப் பெருமணங் கமழும்"—பெருங். 1—33 (73-4)

"மனைப்பூங் காவின் மருங்கிற் கவினிய
பைந்தார் முல்லை வெண்போது நெகிழ"

—பெருங். 3—7 (14-5)

"பல்லிருங் கூந்தல் யாரளோ நமக்கே" என்னும் இவ்வீற்றடி,

"பல்லிருங் கூந்தலாரே நினக்கே" என்று தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், இளம்பூரணருரை, சிதம்பரம்பிள்ளை பதிப்பில் 269-ம் பக்கத்தில் காணப்படுகிறது.

"பல்லிருங்கூந்தல்"—"பெண்டிற், பல்லிருங் கூந்தற் முரற்சி யால் குஞ்சரவொழுகை பூட்டி"

—(பதிற்றுப்பத்து 5-ம் பத்துப் பதிகம்)

எவ்வி

உழுவித்துண்போரும், உழுதுண்போருமென இருவகைப்பட்ட வேளாளர் உண்டு. அவருள் உழுவித்துண்போர் வகையைச் சார்ந்தவன் வேள் எவ்வி. உழுவித்துண்போர் மண்டிலமாக்களும், தண்டத் தலைவருமாய்ச் சோழநாட்டுப் பிடவூரும், அழுந்தூரும், நாங்கூரும், நாவூரும், ஆலஞ்சேரியும், பெருஞ்சிக்கலும், வல்லமும், கிழாரும் முதலிய பதியிற்றோன்றியோராவர். அன்னார் வேள் எனவும் அரசெனவும் உரிமை யெய்தினோராவர். மற்றும் பாண்டிய நாட்டுக் காவிதிப்பட்ட மெய்தினோரும், குறுமுடிக் குடிப்பிறந்தோர் முதலியோருமாய் முடியுடையுடை வேந்தர்க்கு மகட்கொடைக்குரிய வேளாளராவர். வேள் எவ்வி மிழலைக்கூற்றத் துத் தலைவன். இவன் மிகுந்த கொடையாளி இவனைத் தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் வென்றான்.

இவனுடைய கூற்றத்தில் கடற்கரையை யடுத்த நீழல் என்னும் ஊரும் திருப்பெருந்துறை, துஞ்சலூர், தண்டலை என்னும் ஊர்களும் இவனாட்சியிலிருந்தன. இவனைப் பாடிய புலவர்கள் மாங்குடி கிழார், கபிலர், வெள்ளெருக்கிலையார் என்போர் ஆவர். இவன் இறந்தபின்னும் வருந்திப் புலம்பியவர் வெள்ளெருக்கிலையாரே.

"ஓம்ப வீகை மாவேளெவ்வி" என்றும்,

"எவ்வி தொல்குடி" என்றும், "போரடு தானை எவ்வி" என்றும் இவனைப் புலவோர் புகழ்ந்துகூறி யிருத்தல் அறியத் தக்கது.

"ஓம்பா வீகை மாவேளெவ்வி, புனலம் புதவின்மிழலை" (புறம்—24)—இவனது நாடு மிழலை என்பதும் ஈகையும் விளக்கியவாறு.

"எவ்வி தொல்குடி"—(புறம் 202)—குடிப்பழமை விளக்கிய வாறு.

"விரும்பாணொக்கற்றலைவன், பெரும்பூட் போரடு தானை எவ்வி"—(புறம் 233)—பாணர்க்கு எவ்வி தலைவனாய் வரையாது கொடுக்கும் வள்ளலாய் விளங்கியோன் என்பதும், வீரத்தன்மை யுடையோன் என்பதும் விளக்கியவாறு.

"வாய்வா, ளெவ்வி வீழ்ந்த செருவிற் பாணர், கைதொழு மரபின் முறித்திரேஉப் பழிச்சிய" —(அகம் 115)

"பயங் கெழு வைப்பிற் பல்வே லெவ்வி" —(அகம் 126)

"நீடேர் கிழவோன், வாய்வா ளெவ்வி யேவன் மேவார்." —(அகம் 266)

"நரை மூதாளர் கைபிணி விடுத்து, நனைமுதிர்
தேற லுளையர்க் கீயும் பொலம்பூ ணெவ்வி" —(அகம் 356)

என்பவற்றானும் அறிக.

பாணர்

'பெண் பாலாரைப் பாடினி, பாணி விறலியர் என்பர். யாழ் வாசிப் போராகிய ஓர் வகை மரபினர். இவர்களைப் புரவலர்கள் போற்றி வந்தனர். இன்னோர் பொற்றாமரைப் பூப் பெறுதல் மரபு. இவர் மிகப் பழந்தமிழ்க் குடியினர். அவை வேளிராலும் அரச ராலும் அளிக்கப்படுவன. இதனைக் கீழ் வருவனவற்றால் அறிக.

1. "எரியகைந் தன்ன வேடி றாமரை, கரியிரும்
பித்தை பொலியச் சூட்டி, நூலின் வலவா நுணங்
கரின் மாலை, வாலொளி முத்தமொடு பாடினி யணிய"

—(பொருந் 159—162)

2. "தலைவன் றாமரை மலைய விறலியர், சீர்
கெழுசிறப்பின் விளங்கிழை யணிய"
—(மலைபடு—169—170)

3. 'மறம்பாடிய பாடினியும்மே, யேருடைய
விழுக் கழஞ்சிற், சீருடைய விழைபெற்றிசினே,
யிழைபெற்ற பாடினிக்குக், குரல் புணர் சீர்க்கொளை
"வல்பான் மகனும்மே— எனவாங்
கொள்ளழல் புரிந்த தாமரை, வெள்ளிநாராற்
பூப்பெற் றிசினே" —(புறம் 11-9-17)

4. "பாணர் தாமரை மலையவும்" —(புறம் 12-1)

5. "அழல் புரிந்த வடர் தாமரை, யைதடர்ந்த
நூற்பெய்து, புனைவினைப் பொலிந்த பொலனறுந்
தெரியல், பாறுமயி ரிருந்தலை பொலியச் சூடிப்
பாண் முற்றுகநின் னுண்மகி ழிருக்கை" —(புறம்-29)

6. "ஊன்சோற் றமலை பாண்கடும் பருந்தும்" (—புறம் 33)

7. "அமலைக் கொழுஞ்சோறு ஆர்ந்த பாணர்" —(புறம் 34)

8. "பூவி, னாடும்வண் டிமிராத்
தாமரை, சூடாயாத லதனினு மிலையே" —(புறம் 69)

9. "தோங் தீந்தொடைச் சீறியாழ்ப்பாண ...............
தலைப்பாடன்றவ னீகை" —(புறம் 70)

10. "பாணர் மண்டை நிறையப் பெய்ம்மார்"?
—(புறம் 115)

11. "ஒன்னார் யானை யோடைப் பொன்கொண்டு
பாணர் சென்னி பொலியத் தைஇ" —(புறம் 126)

12. "களங்கனி யன்ன கருங்கோட்டுச் சீறியாழ்ப்,
பாடின் பனுவற் பாணருய்த் தென" —(புறம்—127)

13. "பாணர் பாடுநர் பரிசில ராங்கவர்
தமதெனத் தொடுக்குவ ராயின்" —(புறம்—135)

14. "வள்ளுயிர்ச் சீறியாழ், சிதாஅ ருடுக்கை
முதாஅரிப் பாண" —(புறம்—138)

15. "பாணன் சூடிய பசும் பொற்றாமரை" —(புறம்—141)

16. "வணர் கோட்டுச் சீறியாழ்............பாண"
—(புறம்—155)

17. "பாண் பசிப் பகைஞன்" —(புறம்—180)

18. "பாண் கடனிறுக்கும் வள்ளியோய்" —(புறம்—203)

19. "யாணர் நன்னாட்டுள்ளும் பாணர் பைதற் சுற்றத்துப் பசிப் பகையாகிக் கோழியோனே கோப்பெருஞ் சோழன்"—புறம்—212)

20. "இரும்பா ணொடுக்கற் கடும்பு
புரந்ததூஉம்" —(புறம்—224)

21. "பாணர் சென்னியும் வண்டு சென்றாதா" —(புறம்—244)

22. "வாங்கிரு மருப்பிற் றீந்தொடைச் சீறியாழ்ப்
பாணன் கையது தோலே" —(புறம்—285)

23. "பாடினி மாலையணிய, வாடாத் தாமரை
சூட்டுவன் நினக்கே" —(புறம்—319)

24. "பாணரோ டிருந்த.........நெடுந்தகை" —(புறம்—324)

25. "யாணர் நல்லவை பாணரொ டொராங்கு,
வருவிருந் தயரும்" —(புறம்—326)

26. "பசித்த பாண ருண்டு கடை தப்பலின்" —(புறம்—327)

27. "பாணரார்த்தவும் பரிசில ரோம்பவும்" —(புறம்—334)

28. "துடியன் பாணன் பறையன் கடம்பன் என்
றிந்நான் கல்லது குடியு மில்லை" —(புறம்—335)

29. "பாணன் சென்னிக் கேணி பூவா
வெரிமரு டாமரைப் பெருமலர் தயங்க" —(புறம்—364)

30. "பாணர், கைவல் சீறியாழ் கடனறிந் தியங்க"
—(புறம்—398)

31. பாணாற்றுபடை,
"சேணோங்கிய வரையதரிற்
பாணனை யாற்றுப் படுத்தன்று."

மிகவு முயர்ந்த மலை வழியிடத்துப் பாணனை வழியிலே செலுத்தியது.

"இன்னெடை நல்லிசை யாழ்ப்பாண வெம்மைபோற்
கன்றுடை வேழத்த கான்கடந்து—சென்றடையிற்
காமரு சாயலாள் கேள்வன் கயமலராத்
தாமரை சென்னி தரும்"

—(புறப். வெண்—பாடாண்—28)

32. "பைம்பொற்றாமரை பாணர்ச்சூட்டி" —பதிற்று 48)

இதனால் பாணர் பண்டைக் காலத்தில் அகத்தொழுக்கத்தும், புறத்தொழுக்கத்தும் அரசர்க்கும் வேளிர்க்கும் பெரிதும் உதவுவா ராயினர். மற்றும், புறநானூற்றில் 242, 284, 260, 283, 311, 319 என்னும் பாடல்களில் விளங்கக் கூறியிருக்கும் குறிப்புக்களாலும் தமிழ்நாட்டில் பாணர் எத்தகைய சிறப்புப்பெற்றிருந்தனர் என்பது புலனாகும். பாணர், இசைப்பாணர், யாழ்ப்பாணர், மண்டைப்

பாணர் எனப் பல திறப்படுவர். பத்துப் பாட்டில் பெரும்பாணாற்றுப் படை, சிறுபாணாற்றுப் படை என இருபாக்கள் இருத்தலும் அறிதற் பாலன. புறப்பொருள் வெண்பாமாலையில் தும்பைத் திணையில் பாண் பாட்டு என்பது ஓர் துறை. இத்துறைக்குரியனவாய செய்யுட்கள் புறநானூற்றில்அமைத்திருத்தல் காண்க.

பாண்பாட்டு என்பது, "வெண்கோட்ட களிறெறிந்து செங் களத்து வீழ்ந்தார்க்குக், கைவல் யாழ்ப்பாணர் கடனிறுத்தன்று" எனக் கடமை கூறி, யானையை எறிந்து பட்ட வீரர்க்கு (சாப்பண்) விளரிப்பண்ணைப் பாடுதலாகக் கூறியிருத்தல் அறியத்தக்கது.

—(புறப்—வெண்பா—தும்மை 11)

"பாணர் கூத்தர் விறலிய, ரென்றிவர்,
பேணிச் சொல்லிய குறைவினை எதிரும்"

—(தோல்—கற்பு—சூ. 150)

கூற்று நிகழுமிடமாமாறு கூறியிருத்தலால் பாணர் தமிழ் மக்கட்கு இல்லறவாழ்க்கைக்கும் இன்றியமையாதவராயினர் என்பது புலனும்.

பாணர்க்கும் கூத்தர்க்கும் கடமை விதிப்பார்,
"நிலம் பெயர்ந்துறைதல் வரை நிலையுரைத்தல்,
கூத்தர்க்கும் பாணர்க்கும் யாத்தவை யுரிய"

—(தோல்—கற்பு—சூ. 169)

என்பதாலறிக. "அரக்கத்தன்ன" —(அகம் 14)
எனும் செய்யுள் பாணன் கூற்றுதல் காண்க.

மற்றும் துறவிற்குரியராய் வாயில்களைத் தொகுத்துக் கூறுமிடத்தும்,

"தோழி, தாயே, பார்ப்பான், பாங்கன், பாணன், பாடினி, இளையர், விருந்தினர், கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர், யாத்த சிறப்பின் வாயில்களென்ப"—(தோல்—கற்பு—சூ. 193) எனக் கூறி யிருத்தலும் காண்க.

மற்றும், பாண்மை, பாணர் முதலிய வாயில்கள், பரணன் பாணன், தலைவன் இல்லற நிகழ்த்துதற் குரியனபாடாது பரத்தைய ரிடத்து ஒழுகுதற்கு வேண்டுவன பாடுதல், பாணன் தலைவனை யுயர்த் திப் புகழ்தல், தலைவனைப்பண்ணினாற் களிப்பித்தல், பரத்தையரில்லில் யாழ்வாசித்தல், அவன் பாசறைக்கட் சென்று தலைவனைக் கண்டு கூறல், பாணன்பாட்டு, கேட்டோரை அகப்படுத்துதல், அவன் புணை யாகப் புகுதல், பொலிக பொலிக என்று புகுதல், பாணன் முதலி யோர் வாயில் ஆதல், பாணன், யாழ்தழுவித் தலைவனுக்கு வாயிலாய்த் திரிதல், அவனுக்கு யாழ் தெய்வம் என்பது,முதலியவிஷயங்களைக், கலித் தொகையில், முறையே (509, 400, 444, 460, 481, 435, 444, 434, 426, 162, 414, 434, 430, 582 முதலிய பக்கங்களில்)காண்க.

பாணர் பெறும்பூ பொன் னலாக்கப்பட்ட தாமரைப் பூ. "பைம் பொற்றாமரைப் பாணர்ச் சூட்டி"

(பதிற்றுப் பத்து—ஐந்தாம் பத்து—8-1)

'பாணர் தாமரை மலையவும்' (பதிற்—5-ம் பத்து 12-1)

பாண்—பண் அடியாகப் பிறந்த பெயர்.
இனை—இன்னை—என்பதின் இடைச்சொல்
எல்—உரிச்சொல் தன்மை வாய்ந்த இடைச்சொல்

"எல்லே இலக்கம்" —(தோல்-சோல்-இடை 21)

'இனை' என்று நெஞ்சினைப் பிரித்துக் கூறி 'நமக்கு' என்று உளப்படுத்திக் கூறியதும் காண்க.

"உணர்ப்பு வரை யிறப்பினும் செய்குறி பிழைப்பினும் புலத்தலு மூடலும் கிழவோற்குரிய" (தோல்—கற்பு—சூ. 154) என்பதற்கு, "எவ்வி.........நமக்கே" என்பது மேற்கோள்.

—(தோல்—கற்பு—இளம்பூ—பக். 269)

"எவ்வி யிழந்த............நமக்கே"—"இது துன்பத்துப் புலம்பல்; தானே துன்புறுகின்றானாகத் தலைமகன் உரைத்தமையின்."

—(இலக்கண விளக்கம்—பக். 538)

'இனையல் மதி' என்பது இலக்கண விளக்கத்தார் கொண்ட பாடம்.

மெய்ப்பாடு—வறுமை பற்றிய அழுகை
பயன்—ஊடலொழித்தல்.

---

# கம்பரும் மக்கட்பேறும்

(வித்துவான் மா. இராசமாணிக்கம்)

குடும்பம் என்னும் தருவிற்குக் குழந்தையே கொழுங்கனியாகும். எத்துணைத் துன்பங்கள் இருப்பினும் அவை குழந்தையைக் காணும்போது 'வெயிலவனைக் கண்ட பனி போல' அகல்கின்றன. குழந்தை அல்குணங்களால் பற்றப்படாது அன்று மலர்ந்த செந்தாமரை மலர் போன்ற இனிய முகத்தையும் புன்முறுவலையும் மாசற்ற மனத்தையும் கொண்டுள்ளது. தவழ் நடை பயின்றும், மழலைச்சொற் பழகியும், மனங்கரையச் சிரித்தும் ஈன்றோர்க்கு மகிழ்ச்சியை விளைவிக்கின்றது. ஆதலின் இல்வாழ்வார்க்குச் சிறந்த பேறு மக்கட் பேறேயாம். இச்செல்வத்தைப் பெறாதான் எப்பேற்றைப் பெற்றிருப்பினும் பெறாதானே ஆகின்றான்.

"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை; அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற"

என்னும் வள்ளுவர் வாய்ச்சொல் உன்னற்பாலது.

குழந்தை தன் சிறுகையால் அளாவிய கூழ் அமிழ்தினும் இனிமையுடைத்து; குழந்தை தம் உடலைத் தீண்டலால் பெற்றோர் உடற்கின்பம் பெறுகின்றனர்; அதன் மழலைச் சொல்லைக் கேட்டலால் செவிக்கின்பம் எய்துகின்றனர்;

"குழலும் யாழும் இனியவெனக் கூறு வண்ணம் மென்கனிவாய்
மழலை மொழிந்தும் உடற்கின்பம் மருவ ஓடி மேல்விழுந்தும்
விழையும் அமிழ்தின் மிகவினிமை விளைய நுகரும் சுவையடிசில்
செழிய சிறுகை யாலளைந்துஞ் செய்தான் மோகம் ஈன்றோரை"
—பிரபுலிங்க லீலை

என்னும் சிவப்பிரகாசர் செந்தமிழ்ப் பாவினம் ஈண்டுச் சுவைத்தற்குரியது.

அரசன் முதல் ஆண்டி ஈறாகவுள்ள அனைவரும் மக்களை விரும்புகின்றனர். மக்கட் பேற்றால் பெறும் இன்பம் அனைவர்க்கும் ஒருபடித்தேயாம். செல்வன் இடம், பொருள், ஏவல் இனையன பெற்றிருப்பினும் மக்கட் பேறு இலனாயின், யாதும் பெறாதவனேயாவன். துறவோரும் ஒருங்கே அவாவும் மக்களைப் பெறுதலால் உண்டாகும் இன்பம் செப்புந்தரமன்று. பாண்டியன் அறிவுடை நம்பி புகல்வது காண்க:

"படைப்புப்பல படைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத் தாம்வாழு நாளே." —புறநானூறு.

குழந்தை இல்லா இல்லம் பயனற்ற தென்பதைக் காலஞ் சென்ற மஹா வித்துவான் மீனாட்சி சுந்தரனார் தாம் இயற்றிய மாயூரத்தல புராணத்தில்,

"பண்ணிலாப் பாடல் போலும் பரிவிலா நட்புப் போலும்
உண்ணிலா நெய்யி லாமல் உண்டிடும் அடிசில் போலும்
பெண்ணிலாச் சயனம் போலும் பெயரிலா வாழ்க்கை போலும்
கண்ணிலா வதனம் போலும் கான்முளை இல்லா இல்லம்".

எனக் கவின்பெறக் கழறிப் போந்த திறம் கணித்தறியத் தக்கது.

இவ்வுண்மையை நன்குணர்ந்தவனாதலின் 'பாண்டு மன்னன்' மனைவியரைக் கூடலாகாதெனச் சாபம் பெற்ற பின்னர் மக்கட்பேறின்மையைக் குறித்துக் கவல்கின்றான். அவன் மக்கட்பேற்றின் மாண்பினைக் கூறுவதாக வில்லி புத்தூரார் கூறுந் திறம் மகிழத்தக்கது:

''கல்லா மழலைக் கனியூறல் கலந்து கொஞ்சும்
சொல்லால் உருக்கி அழுதோடித் தொடர்ந்து பற்றி
மல்லார் புயத்தில் விளையாடு மகிழ்ச்சி மைந்தர்
இல்லா தவர்க்கு மனைவாழ்வி னினிமை என்னாம்?''

''மெய்தானம் வண்மை விரதந்தழல் வேள்வி நாளும்
செய்தாலும் ஞாலத் தவர்நற்கதி சென்று சேரார்;
மைதாழ் தடங்கண் மகவின்முக மன்னு பார்வை
எய்தா தொழியிற் பெறுமின்பம் எவனு மில்லை.''

—வில்லிபாரதம், சம்பவச் சருக்கம்.

ஒவ்வொரு புலவரும் மக்கட் பேற்றினை இடத்துக் கேற்பப் பாராட்டிப் பாடியிருத்தலை நோக்க, மக்கட் பேற்றின் மாட்சி இத்தன்மைத்தென இனிது புலனாம். 'நள வெண்பா' பாடிய புகழேந்தியாரும் இதை விட்டிலர். 'குற்ற மில் காட்சிக் குதலைவாய் மைந்தரை அழைத்துக்கொண்டு நின் தாய்வீடு செல்க', என்று கொழுநனை நோக்கித் தமயந்தி, 'மக்களைப் பெறலாம்; கணவனைப் பெறலாகுமோ? நின்னை விட்டுப் பிரியேன்' என, 'கணவனினும் மக்களையே பாது காத்தல் சிறந்தது' என்பதைக் கூறுமுகத்தால் நளன் மக்கட் பேற்றின் பெருமையைப் பேசியது உள்ளக் கிளர்ச்சியை உண்டாக்குவதாகும்:

"பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனும் உடையரோ—இன்னடிசில்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்?"

"சொன்ன கலையின் துறையனைத்துந் தோய்ந்தாலும்
என்ன பயனுடைத்தாம் இன்முகத்து—முன்னம்
குறுகுதலைக் கிண்கிணிக்காற் கோமக்கள் பால்வாய்ச்
சிறுகுதலை கேளாச் செவி?"

* * *

இன்னணம் பல்லோராலும் பாராட்டப்பட்டுள்ள 'மக்கட் பேறு'—நம் கம்பர் பெருமானால் பாராட்டப்படாதிருத்தலும் கூடுமோ? அரசியல் முதலிய மாபெருந்துறைகளில் எல்லாம் கைபோய புலவர், இல்வாழ்வாற்குரிய இப்பேற்றினை அறிந்து மகிழாதவரோ? இல்லை! இல்லை!! அவரும் தம் பாகத்தைக்

கூறியே முடிக்கின்றார்; தயரதன் வாயிலாகத் தாங்கொண்ட மக்கட்பேற்றின் மாண்பைக் கவினுறக் காட்டி மகிழ்கின்றார்.

தயரதன் பல்லாண்டுகளாகத் தவித்து அரிதின் பெற்ற தவப் புதல்வர் நால்வருள் அவன் அன்பிற்குப் பாத்திரனான இராமனைக் கோசிகன் அழைத்துச் செல்ல விரும்பினான்; விரும்பி, "நின்மக்கள் நால்வரினும் கரியசெம்மல் ஒருவனைத் தந்திடுதி" என உளையக்கூறியது, யமனே வந்து 'உன்உயிரைக் கொடு' என்று கேட்டது போல இருந்தது என்று கூறிக் கம்பர் கவல்கின்றார் தயரதன் வருந்தியதை விடப் பதின் மடங்கு கம்பர் வருந்துதலே நயமுடைத்து; "உயிர்க்கும் கொடுங்கூற்றின் உளையச் சொன்னான்" என்றார். அத்துடன் விட்டனரா கம்பர்? அவன் துயரத்தை உவமைகளால் விளக்குதல் பின்னும் அழகிது:

"எண்ணிலா அருந்தவத்தோன் இயம்பியசொல்
மருமத்தின் எரிவேல் பாய்ந்த
புண்ணிலாங் கனல்நு ழைந்தா
லெனச் செவியில் புகுதலோடும்
உண்ணிலா வியதுயரம் பிடித்துந்த
ஆருயிர்நின் றூச லாடக்
கண்ணிழந்தான் பெற்றிழந்தானென வுழந்தான்
கடுந்துயரம் கால வேலான்."

—கையடைப்படலம்

பின்னர் ஒருவாறு தெளிந்த தயரதன் அரச மாதவனை நோக்கி, "இவன் படையூற்றம் இலன்; சிறியன்; பாலன்; பணியிதுவேல், யான்காப்பென், பெருவேள்விக்கெழுக" என்றான் என்று கம்பர் கூறுவது, 'கம்பர் தயரதனைப் புத்திர வாஞ்சையால் குமரனாக்கி விட்டனரோ' என ஐயுற்று மகிழ வேண்டுவதாக உள்ளது. இவன் இங்ஙனம் தான் வருவதாகக் கூறவே மாதவன் புருவம் நெற்றிமுற்றச் சென்றன. அது கண்ட வசிட்டன் தயரதற்கு ஆறுதல் கூற, அரசன் இராம லட்சுமணரைக் கோசிகன்பால் விட ஒருவாறு இசைந்தனன்; இசைந்து இருவரையும் கோசிகன்பால் விடுகையில், கோசிகனை நோக்கி, "நற்றாதையும் நீ, தனித்தாயும் நீ இவர்க்கு" என்று குழைந்த மனத்தவனாய்க் கூறுந்திறம் நம்மைக் குழையச் செய்கிற தன்றோ? தயரதனைக் குழையச்செய்யும் கம்பர் குழைகின்றார்; நாமும் குழைகின்றோம்; என்னே கவிச்சக்கரவர்த்தியாரின் தனிப்பெரும் ஆற்றல்!

சீதையம்மையை மணந்து மிதிலையினின்றும் இராமன் தயரதனோடும் சேனைகளோடும் வருகையில் சமதக்கினியார் மகனான 'பரசுராமன்' திடீரெனத் தோன்றினன்; அவ்வளவே: தயரதன் நடுக்கங்கொண்டான்: பரசுராமன் தான் கைக்கொண்ட வில்லை வளைக்குமாறு இராமனை அறைகூவக் கேட்ட தயரதன் குற்றுயிராயினான்; 'சிவன்' வில்லை இறுத்த இராமன் 'இவன்' வில்லை ஒடியானோ என்பதையும் ஓர்ந்திலன்; புத்ர வாத்ஸல்யம் கரைபுரண்டோட, 'பரசுராமன் இராமனை யாது செய்வனோ!' என அஞ்சியவனாய் அம்மறையவனைப் பணிந்து," உமக்குச்

"சிவனும்மய னரியுமலதிச் சிறுமானிடர் பொருளோ?
இவனும்என துயிரும்உன தபயம்இனி" என்றான்,

எனக் கம்பர் கூறிக் குறுநகையும் கொள்ளல் பாராட்டற்பாலது.

பரசுராமன் தந்த வில்லை இராமன் தாங்கியதும் தயரதன் மூர்ச்சையானான். சீராமனோ புன்முறுவலோடு வில்லை வளைத்து அந்தணன் ஆணவத்தை அடக்கினான். அவ்வளவில் மதியிழந்து, தன்வாயிழந்து அருந்தவன் மறைந்தான். அவன் மறைந்த பின்னர் வையம் காக்கும் தயரதன் மூர்ச்சை தெளிந்து எழுந்தான்; மைந்தனது மாண்புறு வெற்றியை யறிந்தான்; கரையிடற் கரியதோர் உவகைக் கடலெனப் பொங்கினான். பின்னர் யாது செய்தான்?

"பரிவறு சிந்தையப் பரசு ராமன்கை
வரிசிலை வாங்கியோர் வசையை நல்கிய
ஒருவனைத் தழுவிநின் றுச்சி மோந்துதன்
அருவியங் கண்ணெனும் கலச மாட்டினான்"

—பரசுராமப் படலம்

என்று, தயரதன் கொண்ட மகிழ்ச்சியைத் தாம் அடைந்ததே போலக் கம்பர் அகமகிழப் பாடியுள்ளமை பாராட்டத் தக்கது.

தயரதன் பல்லாண்டுகள் பிள்ளையின்றி அரிதின் பெற்ற இராமனை நோக்கிப் பிறந்த ஞான்றே போல மகிழ்ந்தான்; சிவன் வில்லை இறுத்துச் சீதையை மணந்த அற்றைஞான்றும் அகமகிழ்ந்தான்; காவலரைக் கலக்கி அட்டகாசம் செய்து வந்த பரசுராமனைப் பங்கப்படுத்திய இற்றை ஞான்றும் அகமிக மகிழ்ந்தான் எனின், மக்கட்பேற்றால் தயரதன் பெற்ற பேறு யாதென இயம்புவது!

ஸ்ரீராமன் பரசுராமன் வில்லை ஒடித்தது முதல் தயரதன் இராமனைச் சில சந்தர்ப்பங்களில்,

> "பூண்ட போர்மழு வுடையவன் நெடும்புகழ் குறுக
> நீண்ட தோளைய!"

என விளித்து மகிழ்தல் காண்க.

பின்னரும் இராமனுக்கு முடிபுனைய 'நாளைக் குறிமின்' என்று கணித மாக்களை நோக்கித் தயரதன்,

> "வடிமழு வாளவற் கடந்த மைந்தற்கு
> முடிபுனை கடிகைநாள் மொழிமின் என்றனன்"

என்பதாகத் தயரதன் மறந்தாலும் தாம் மறவாமல் அவன் கூறியதாகக் கம்பர் கூறி மகிழ்தலே நாம் வியந்து பாராட்டற் பாலது.

ஸ்ரீராமனுக்கு முடிகவிக்க நினைத்திருப்பதைத் தயரதன் வசிட்டன் முதலானவர்க்குக் கூற, வசிட்டன், "அரச! சீதை அம்மை பூமாதினும் நல்லள்; புவிமாதினும் நல்லள்; கலைமாதினும் நல்லள். இராமன் மண்ணுயிர்க்கினியன்; கற்றோரும் மற்றோரும் அவனையே உண்ணு நீரினும் உயிரினும் உயர்வாய் உன்னுவர்" என்றான்:

> "மண்ணினு நல்லன் ; மலர்மகள் தன்னினும் கலையூர்
> பெண்ணினு நல்லள் ; பெரும்பெயர்ச் சனகியோ நல்லள் ;
> கண்ணினும் நல்லள் ; கற்றவர் கற்றி லாதவரும்
> உண்ணு நீரினும் உயிரினும் அவனையே உவப்பார்"

—மந்திரப் படலம்

வசிட்டன் வாய்மொழி கேட்ட மன்னன் உள்ளத்தில் ஒருவராலும் கரைசெய்ய அரியதொரு பேருவகை கொண்டான் என்பதைக் கம்பர் பின் வருங்கவியால் கவினுறக்காட்டல் கண்டு மகிழ்க:

> "மற்ற வன்சொன்ன வாசகங் கேட்டலும் மகனைப்
> பெற்ற அன்றினும், பிஞ்ஞகன் பிடித்தஅப் பெருவில்
> இற்ற அன்றினும், எறிமழு வானவன் இழுக்கம்
> உற்ற அன்றினும் பெரியதோர் உவகையன் ஆனான்."

இக்கருத்தினை,

> "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
> சான்றோன் எனக்கேட்ட தாய்"

என்ற வள்ளுவர் வாக்குடன் ஒப்புநோக்கி உணர்க.

# அகப்பொருள் அழகு.

[வித்துவான் மணி. திருஞானசம்பந்த முதலியாரவர்கள்]

(முன் ௧௧௫-ம் பக்கத் தொடர்ச்சி)

எல்லா எழில் நலங்களும், பிற செம்மை நலங்களும் ஒருங்கு பெற்ற ஒரு தலைமகன் தன்னைப்போன்றே தலை சிறந்த மெல்லியலார்க்குரிய அணிநலங்கள் அனைத்தும் செவ்விய பாவையர் மாண் குணங்களின் நலங்கள் பலவும் ஒருங்குபெற்ற ஒரு தலைவியின் மாட்டே துய்த்த இன்பநலத்தின் மாண்பய னுகை, அவளை எஞ்ஞான்றும் மறவாது தன்மனத்தகத்தே அவ ளுக்குப் பீடுறு பீடம் ஈந்து, அவள் அழகின் நலங்களோடு அவள் செவ்வியின் நலங்களையும் சதா துய்த்த வண்ணமாகவே ஒளிரா நிற்பான் என்றும், பிற பாவையர் ஒருத்தியையும் தன்மனத்தினுந்தொடான் என்றும் அறிதல் வேண்டும். இப் பெற்றித்தாய அன்புதான் இணையிலா உலவாத இன்ப அன்பு என்று கூறத்தகும். இத்தகைய அன்பு இறைவன்பால் தலை சிறந்த பத்திமான் செலுத்தும் அன்பிற்கு இணையாகும் என்று கூறவுந் தகும்.

எல்லாச் செம்மைகளும் தவழப்பெற்ற ஒரு தலைவனும், ஒருதலைவியும் ஓர் இடத்தே ஒருவர் இன்பத் தோற்றத்தை ஒருவர் முன்னர் நுகர்ந்து, பின்னர் மெய்யின்பத்தைச் செவ் வதின் துய்த்துத், தத்தம் மனவிருப்பம் நிறைவேறப் பெற்று, மனவமைதி பெரிதே பெற்றுப் பின்னர் மெய்யுறு போகம் சின்னுள் தளர்ந்து நுகர்ந்து, இறுதியில் அவர்கள் இருவரும் தாம் எய்திய இன்பத்தில் சலித்துப், புதிய இன்பம் பிற மக்களிடத்தே விழைவார்களானல், அகப்பொருள் என் னும் செம்பொருள் இலக்கணத்தால் மக்களுக்கு உண்மையில் யாதொரு மாண்பயனும் விளையாதென உறுதியாகக் கூற லாம். ஆனல், ஆடவர்கள் இயல்பும், பாவையர் இயல்பும் பெரும்பான்மையாக மாறுதல் அடையும் பெற்றிமையையே உடையதாகக் காணப்படுகின்றது.

உலகப்படைப்பை நுணுக ஆராயவல்லார் இவ் வுண்மை யைச் செவ்விதின் உணர்வார்கள். அங்ஙனம் உணர்ந்தவர்களே நம் பண்டைய நல்லறிஞர்கள். ஆதலால், சிற்சிலரே தவிர, ஏனையோர் அனைவரும் புதிய புதிய இன்பத்திற்கு அடிமை யாகும் நீர்மை யுடையாரே என்பதில் தினைத்துணையும் ஐய மின்று. உலகில் உள்ள பற்பல நாட்டு ஆண்மக்களும், பெண்

மக்களும் புதிய புதிய இன்பங்களை நம் நாட்டவரைக் காட்டினும் மிகுதியாக நாடுகின்றார்கள் என்று கூறுதல் தவறாகாது. அங்கு அத்தகைய உணர்ச்சி ஆடவர்க்கும் மகளிர்க்கும் உன்னத நிலையில் இருத்தலால்தான், எத்துணைய எழில் நலம் மிக்க இளம்பாவையர்களும் தம்மிடத்தே தலை சிறந்த அன்பும், கனிவும், அருமையும், உண்மையும் முதலில் காட்டிய ஆடவர்கள் தம்மை முற்றிலும் மறந்து, வேறு மடவாரை அணுகி, அவர்தம் புதிய இன்பம் நுகரும் அவாமிகுதியால், அவர்களைப் புதிதாக மறுமுறை வதுவையும் புரிகின்றனர். அங்ஙனமே பற்பல பேரணி கெழுமிய மங்கையரும் தாம் முதலில் ஒப்புயர்வில்லா இன்பம் துய்த்த ஆடவர்களை முற்றிலும் மறந்து, பிற ஆடவர்கள் புதிய முயக்கிற்கு ஆசைப்பட்டு, வேறு ஆடவரை மறுமணம் புரிந்து கொள்கின்றனர். இத்தகைய இழிபுள்ள திருமணங்களால் தீமைகள் கணக்கின்றி உற்பத்தியாகி உரம் பெறுகின்றன.

நம் நாட்டு ஆண்மக்களிலும் சிற்சிலர், புதிய பாவையர்களிடத்தில் புதிய இன்பம் விழைந்து, தங்கள் கல்வியருமையையும், அறிவின் பெருமையையும் ஏனைய பெருஞ் சிறப்புக்களையும் இழந்து, அவற்றை ஒரு கணத்தில் தாம் புதிதாக விரும்பிய பாவையர்க்கு விற்றுத் தங்களைத் தாங்களே இழிவுபடுத்திக் கொள்கின்றனர். ஆனால் நமது தேசத்தில் ஆடவர்கள் பல மங்கையரை மணம் புரிந்துகொள்ளத் தனி உரிமை பெற்றிருத்தலால் அவர்கள் யாதொரு இடையூறும், துன்பமும் இன்றித் தாங்கள் பின்னர்ப் புதிதாக விழைந்த மாதர்களையும் கவலையின்றி மணந்து கொள்கின்றனர். பின்னர் அவர்கள் அக்காரணம்பற்றி அடைகின்ற துன்பங்களின் கடுமையை அவர்கள்தாம் அறிவார்கள். அஃது ஒருபுறம் கிடக்கட்டும். நம் நாட்டு ஆண்மக்கள் தங்கள் சிந்தை சென்ற வழியே சென்று, போதிய பணம் மட்டும் பெற்றிருப்பராயின், மேலும் வேறு மங்கையர்களையும் வதுவை புரிந்து வாழ்கின்றனர். நமது நாட்டில் அகப்பொருள் என்னும் ஓர் அருமையான சீரிய நெறி கற்பிக்கப் பட்டிருப்பினும், பல ஆடவர்கள் பல மங்கையர்களை மணம் புரிந்து கொள்ள உரிமை பெற்றிருத்தல் பெரிதும் வருந்தத்தக்கதேயாகும். ஆனால், தலை சிறந்த ஆடவர்கள் மாத்திரம் தலை சிறந்த பாவையர்மேல் ஒரே ஒரு மகளையே மருவி, நெறி வழுவாமல் உண்மையையே அண்மி, உயர்வு மிக்க வாழ்வைப் பெற்றுப் பொலிவுற்றனர் என்பது யாவரும் அறிந்ததேயாகும். அத்தகைய ஆடவர்கள் பத்திநெறியும், இல்லற

நெறியும், ஒருங்கே பெற்றிருந்த நாயன்மார்கள் பலரும், சீரிய குணம் வாய்ந்த ஸ்ரீராமன், அரிச்சந்திரன், சத்திய வான் முதலியோர் ஆவார்கள். அத்தகைய சிறந்த ஆண் மக்களின் செவ்விய வாழ்க்கையைத்தான், அறிஞர்கள் விரும்பு கின்றார்கள். நமது நாட்டில் ஆண்மக்கள் வேறு வேறு மங்கையரைப் புதிதாக வதுவை புரிந்துகொள்ளத் தனியுரிமை பெற்றிருப்பினும், தக்க வருவாயும், தக்க திருவும், தக்க வசதி யும் இன்மையால் ஒரே ஒரு மாதையே மணம்புரிந்து, பெரும் பாலும் வாழ வேண்டியவர்களாக இருக்கின்றார்கள் என்றும் கூறலாம். ஆனால், நமது தேசத்துப் பெண்மணிகளுக்கும் இயல்பாகவே புதிய இன்ப வுணர்ச்சி தோன்றாதோ என்று ஓர் ஐயம் நிகழும். அவ்வுணர்ச்சி தோன்றினும், தோன்றா திருப்பினும், கற்புக்கே இருப்பிடமாக வாழ்ந்து சிறப்படைய நம்மங்கையர்கள் தொன்று தொட்டு செவ்விய நெறியில் பழக் கப்பட்டு வருதலாலும், அவர்களுக்குத் தனியுரிமை வேறு வேறு ஆடவர்களை மணந்துகொள்ள இல்லாமையாலும், பொது வாக எல்லா மாதர்களும் தங்கள் கொழுநரையே தலை சிறந்த நிலையில் காதலித்து, அவர்களையே கண்கண்ட தெய்வமாகவும் கருதி, அவர்களுக்கே உடல், பொருள், ஆவி மூன்றினையும் அளிக்கவும் களிப்புடன் முன் வருபவர்கள் ஆனார்கள். இப் பெரிய திருவினை நமது நாடு எய்தியிருத்தல் நம் தேசத்து ஆடவர்களுக்கு ஒரு தனிச் செருக்கும், பூரிப்பும் ஆக இருக் கின்றது என்று சொல்லவும் வேண்டுமோ?

மேற்கூறிய விஷயங்களால் அறியக் கிடப்பது யா தெனின், உலகில் ஆண்மக்கள் மனப்பான்மையும், பெண்மக் கள் மனப்பான்மையும், பொதுவாகப் புதிய இன்பத்தை விழை யும் நீர்மைத்தே என்றும், அக்காரணம் பற்றியே ஆடவர் களும், பெண்மணிகளும் முதலிலேயே தாங்கள் விரும்பும் வண்ணம் தங்கள் இனிய இல்லறத் துணைவிகளையும், இல்லறத் துணைவர்களையும் முறையே தேடி, வதுவை புரிதல் வேண்டும் என்பதாகும். அங்ஙனம் செய்யின், மனையற வாழ்க்கை யில் மாட்சிமை ஒளிர்வதோடு, இன்ப ஆட்சியும் ஒளிரும் என்பதில் தினைத்துணையும் ஐயமின்று. இத்தகைய சீரிய ஒப்புயர்வில்லா வாழ்க்கையை நம் இளைஞர்களும், இள மங் கையர்களும் வாழ்ந்து இன்ப வெள்ளத்தில் தேக்கி, மாண் புறுதல் வேண்டும் என்றே அகப்பொருள் இலக்கணம் எழுந் தது என்று ஒவ்வொருவரும் இனிது உணர்தல் வேண்டும்.

ஆதலால், அகப்பொருள் துறையில் புதைந்து கிடக்கும் அளவிடற்கரிய பெருமை வாய்ந்த பெரும் புதையல்கள் பல

வற்றுள் சிற்சிலவற்றையேனும் நாம் தேடிஎடுத்து, அவற்றின் மாண்பயனை எய்துதல் வேண்டும். ஒழுக்கமே செம்மையுறக் கற்பிக்கத் தோன்றிய அறிவுக்கடலாகிய நுணுக்கத்திற்கும் நுணுக்கமாகத் திகழ்ந்த தெய்வப்புலவர் திருவள்ளுவ நாயனார் ஒரு தலைமகன் தான் நனிகாதலித்த தலைமகளிடத்து இன்பம் நுகர்ந்த பின்னர், அவள் மாட்டுச் சலிப்பு ஒரு சிறிதும் எய்தாமல், விருப்பே மேலும் மேலும் மிகுதியாகப் பெற்று, அவளைக் கனவிலும் மறவாமல், அவள் வயமேயாகி, அல்லது வெளிப்படையாக உரைக்கு மிடத்து, அவளே அவனாகி, அவளைக் குறித்து மிகவும் சிறப்பாகத் தன் உள்ளத்தில் பல இன்ப நல்ல எண்ணங்கள் கொள்ளுவதோடு அவளைப் பற்றிச் சமயம் வாய்த்துழி வாய்த்துழி அவளைப் பல வாற்றானும் நயந்துரைப்பதாகப் பாவித்துக் கூறும் விஷயங்கள் அளவிடற்கரிய இன்பங்களை ஒவ்வொருவர் உள்ளத்திலும் நிறைவிக்கும் என்பதில் ஐயமின்று.

(தொடரும்)

---

## தமிழின் சிறப்பு

இடம்பத்தையும் ஆரவாரத்தையும் பிரயாசத்தையும், பெருமறைப்பையும், போது போக்கையும் உண்டு பண்ணுகின்ற ஆரிய முதலிய பாஷைகளில் எனக்கு ஆசை செல்லவொட்டாது, பயிலுதற்கும், அறிதற்கும் மிகவும் இலேசுடையதாய், பாடுதற்கும் துதித்தற்கும் மிகவும் இனிமையுடையதாய், சாகாக் கல்வியை இலேசில் அறிவிப்பதாய்த் திருவருள் வலத்தாற் கிடைத்த தென் மொழி யொன்றனிடத்தே மனம் பற்றச் செய்து அத் தென்மொழிகளாற் பலவகைத் தோத்திரப் பாட்டுகளைப் பாடுவித்தருளினீர்.

—திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகள்.

# ஆராய்ச்சிப் பகுதி-Research

## தனித்தமிழும் கலப்புத்தமிழும்

[மறைமலையடிகள் மகனார் வே. மாணிக்கவாசகம் எழுதியது.]

(முன் ௧௯௨-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்மொழியோ பழைய நாளில் ஒரு சிறு கூட்டத்தவரால் பேசப்படாமல், இவ்வுலக மெங்கணும் பரவியிருந்த பெருந்தொகையினரான நாகரிக நன்மக்களால் வழங்கப்பட்டதாகும். பண்டைத் தமிழ் மக்கள் உழவு, வாணிகம், கைத்தொழில், போர்த்தொழில் முதலிய எல்லாத் துறைகளிலும் ஒப்புயர்வின்றி ஓங்கிப் பொலிந்தமையால், அவர்களை அலைப்பாரும் அவர்கள் வழங்கிய தமிழ்மொழியை அலைத்துச் சிதைப்பாரும் அந்நாளில் இலராயினர்.

இனித், தமிழோ காலங்கடோறுந் தன்னியல்புக்கு மாறுகத் திரிபு அடைந்துவராத மொழி. தமிழ் இன்ன காலத்திலேதான் தோன்றியதென்று கட்டுரைத்துச் சொல்லல் இயலாதாயினும், அதன் பழமையை வரலாற்று முறையில் ஆராய்ந்து பார்க்குங்கால், அஃது எகிப்தியர் காலத்திற்கும் முற்பட்டே சிறந்து வழங்கிய தொன்றாகக் காணப்படுகின்றது. இற்றைக்கு ஐயாயிரத்துஐந் நூறு ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்டு இதுகாறும் வழங்கி வருவதாகிய **தோல்காப்பிய** மென்னும் அருந்தமிழ் நூலை உற்று ஆராயுங்கால் தொல்காப்பியத்திற்கு முன்னமே எத்தனையோ பல சிறந்த தமிழ்நூல்கள் இருந்திருக்க வேண்டுமென்பது தெளிவாகத் தெரிகின்றது. இவ்வளவு பழமையான காலத்திலே எழுதப்பட்ட நூல்கள் இப்போது முழுதும் நமக்குக் கிடையாவிடினும்அவற்றிற் சில சில பகுதிகளும், தொல்காப்பியம் முழுமையுந் தொல்காப்பியத்திற்குப் பின்னெழுந்த பல முழு நூல்களும், அவற்றிற்குப் பின்னே வந்த "பத்துப் பாட்டும்" "எட்டுத்தோகை" பதினேண் கீழ்க்கணக்கு" முதலான பழைய தமிழ் நூல்களுந் தொடர்பாக நமக்குக்கிடைத் திருக்கின்றன. இவ்வளவு நூல்களையும் சிறிது உதவிகொண்டு நாம் எளிதிற் கற்றறியத் தக்க நிலையில் இருப்பதை உணர்ந்து பார்க்குங்கால், நம் முன்னோர்கள் நமது தமிழ் மொழியை எவ்வளவு பாதுகாத்துத் திரிபடையாமலும், பிறமொழிச் சொற்கலவாமலும் வழங்கி வந்திருக்கின்றனரென்பதை அறியலாம். பெரும்பான்மையான இந்நூல்கள் திரிபடையாத தமிழில் எழுதப்

பட்டிருத்தலினலேதான், இப்போதும் நாம் அவைகளை எளிதிற்கற்று, நம் முன்னோர்களின் உயர்ந்த சிறந்த கருத்துக்களை அறியப்பெறுகின்றோம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்ட திருக்குறளை நாம் இப்போது எளிதிற் கற்று உணர்தல் போல், இக்காலத்து ஆங்கில மொழியைக் கற்பவர்கள் ஐந்நூறாண்டுகட்கு முற்பட்ட சாசருடைய நூல்களையும், முந்நூறாண்டுகட்கு முற்பட்ட ஷேக்ஸ்பியருடைய நூல்களையும் எளிதிற் கற்றறிதல் கூடுமோ என்பதை எண்ணிப் பார்த்தல் வேண்டும். ஆகவே, நமது செந்தமிழ் மொழி ஆறாயிரம் ஆண்டுகட்கு மேலாக நம் முன்னோர்களால் திரிபடையாமற் பாதுகாக்கப்பட்டு வந்ததனால் நாம் அடைந்து வரும் பெரும்பயனும், ஆங்கில மொழி, காலங்கடோறும் மாறி வந்ததனால் ஆங்கில மக்கள் நெடுங்காலம் வரையில் அதனாற்பயன் பெறாதிருந்து, அதனால் பெரிதும் இடர்ப்பட்டு, இப்போது அதனைத் திரிபடையாமற் பாதுகாத்து வருதலால் அவர்கள் அடைந்துவரும் நன்மையும் ஆராய்ந்து காண்பவர் தமிழ் பிறமொழிக்கலப்பினால் திரிபடைந்து வருதலாலேயே அதற்கு நன்மையுண்டாகுமெனச் சொல்ல மாட்டார்.

இனித், தமிழ் நெடுங்கணக்கிலுள்ள எழுத்துக்களைக் குறைக்கவேண்டு மென்றும், அயல் மொழிகளிலுள்ள ஒலிகளைத் தமிழிற் சேர்த்துக் கொள்ள வேண்டு மென்றும், அப்போதுதான் தமிழ் வளர்ச்சியடையு மென்றும் கூறுவர் சிலர் நல்லது. தமிழ்ச் சொற்களினாலுந் தமிழ் ஒலியினாலுந் தெரிவிக்கக் கூடாதவை இருப்பினன்றோ அயல் மொழிச் சொற்களையும், ஒலிகளையுஞ் சேர்த்தல் வேண்டும். உலகத்தில் உள்ள எல்லாப் பொருள்களையும், எல்லா அறிவு இயல்களையும் தமிழ்ச் சொற்கள், தமிழ் ஒலிகள் கொண்டே செவ்வையாகத் தெரிவிக்கலாம் என்பது, மறைமலையடிகள் எல்லாத் துறைகளிலும் புகுந்து எழுதி யிருக்கும் நூல்களைச் சிறிது பார்த்தாலுந் தெரிந்து கொள்ளலாம்.

மேலுந், தமிழ் நெடுங் கணக்கிலுள்ள முப்பது எழுத்துக்களும் முப்பது ஒலிகளுமே மக்களுக்கு இயற்கையாகத் தோன்றக்கூடியவை யென்றும், முப்பது தமிழொலிகளைக் கொண்டே உலகத்திலுள்ள எல்லா மொழிகளின் எல்லா ஒலிகளையும் எளிதில் தெரிவிக்கலா மென்றுங் காலஞ் சென்ற திரு. பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள் மிகவும் நுட்பமாக ஆராய்ச்சிசெய்து நன்கு விளக்கிக் காட்டி யிருக்கவும், அவைகளையெல்லாம் ஆராய்ந்து பாராது தமிழ் நெடுங்கணக்கைக்

குறுக்க வேண்டுமென்றும் பிறமொழிச் சொற்களையும் ஒலிகளையும் தமிழிற் சேர்க்க வேண்டு மென்றும் சொல்வது மிகவும் வருந்தத்தக்கது. குறைபாடில்லாத தமிழ் மொழியைச் சீர்திருத்த வேண்டுமென்று சொல்லும் அவர்கள் குறைபாடு நிரம்பிய ஆங்கிலம் முதலானமொழிகளைச் சீர் திருத்த முன்வராததென்னையோ?

தமிழ் மொழியிலே தான் இறைவனுக்குப் பெரு விருப்பு என்று எம் தமிழ்ப் பேராசிரியர் எழுதியதை ஏளனமாகப் பேசினர் சிலர். உலகத்தில் உள்ள எல்லாரும் நல்ல சொற்களையும் நல்ல சொற்பேசுவாரையுமே விரும்புகின்றனரன்றித், தீயசொல்லையும், தீயசொற் பேசுவாரையும் விரும்புகின்றனரா? இல்லையே. ஒரு தந்தையானவன் தன் மக்கள் பலருள்ளும் நல்ல சொற் பேசும் நல்ல தன் புதல்வனையே விரும்புகின்றனனன்றித், தீயசொற் பேசுந் தீய தன் புதல்வர்களை விரும்புகின்றனனு? இல்லையே. அதுபோல் எல்லாம் வல்ல இறைவனும் இனிய தமிழ் மொழியையும் அதனைப் பாதுகாத்து வழங்கிய இனிய தமிழ்மக்களையுமே பெரிதும் விரும்பினுன் என்றுல் அதிற் குற்றமென்னையோ? பண்டைக்காலந் தொட்டு இதுவரையில் வழங்கும் மொழி தமிழைத்தவிர வேறென்று உண்டென்று விரல்விட்டுக் காட்ட முடியுமா? எகிப்தியம், சாலடியம், அசிரீயம், எபிரேயம், கிரேக்கம், இலத்தீன், ஆரியம், சென்டு, பாலி முதலான பழைய மொழிகளெல்லாம் எங்கே? அவைகளெல்லாம் பொதுமக்களாற் பேசப்படாமல் மாண்டு மறைந்துபோகத் தமிழ் மட்டும் இன்னும் பலகோடி பொதுமக்களாற் பேசப்பட்டு வருவதைத் தாங்கள் எண்ணிப்பார்த்த துண்டா? இப்போது இவ்விந்திய நாட்டிலும் மற்ற ஐந்து நிலப்பிரிவுகளிலும் வழங்கும் பல திறப்பட்ட மொழிகளெல்லாம் நானூறு ஐந்நூறு ஆண்டுகட்கு மேற்பட்டவைகளல்லவென்பதும், அவைகளிற் பழைய இலக்கண இலக்கிய நூல்கள் இல்லை யென்பதுந் தாங்கள் ஆராய்ந்து பார்த்ததுண்டா? இவைகளையெல்லாந் தாங்கள் ஆராய்ந்து பார்ப்பீர்களானுற் பழமைக்குப் பழமையாய்ப் புதுமைக்குப் புதுமையாய்ச், சாதி சமயக் குறும்புகளும், புராணப்புரட்டுகளும் இல்லாமற், கடவுளையும், உலகத்தையும், உயிரையும்பற்றிய உண்மைகளையே உள்ளவாறு எடுத்துரைக்கும் அரும்பெரு நூல்களையேயுடைய தமிழ் மொழியிலும், அதனைத்தாயதாக வழங்கிய தமிழ் மேன் மக்களிலும் இறைவனுக்குப் பெரு விருப்பு இருக்கத்தான் வேண்டு மென்பதை எளிதில் அறிந்து கொள்ளலாம். இறைவனுக்குத் தமிழிற்

பெருவிருப்பு உண்மையினாலன்றோ, திருஞான சம்பந்தர் அன்பினாற் குழைந்துருகிப் பாடிய தமிழ்ப் பதிகங்களை நெருப்பில் வேகவிடாதும், நீரில் இழுக்கப்படாமலும் வைத்து இறைவன் அதன் அருமையைப் புலப்படுத்தினான். இன்னும் பாண்டியன் கொண்ட வெப்புநோய் தீர்த்ததும், எலும்பைப் பெண்ணாக்கியதும், முதலைவாய்ப் பிள்ளையழைத்ததும் இன்னும் இவைபோன்ற பல அருள் நிகழ்ச்சிகளைக் காட்டியதுந் தமிழேயன்றிப் பிறமொழி அன்றே! அல்லது பிறமொழியில் இத்தகைய அருள் நிகழ்ச்சிகளைத் தக்க அகச்சான்று புறச்சான்றுகளுடன் எடுத்துக்காட்டல் இயலுமா? வெறுங் கதைகளாகப் பின்னே ரெழுதிவைத்திருப்பவைகளைக் காட்டுவது பயன்படாது.

இனி, எடுத்த பொருளைவிட்டுத் திருவள்ளுவரின் திருவுருவம் சைவ அடையாளங்கள் உடையதாகச் செய்யப்பட்டிருப்பது பிசகென்றும், அவ்வடையாளங்களை எடுத்துவிட்டு அவரை எல்லா மதத்தவர்களும் பொதுவான உருவத்தோடு வைக்க வேண்டுமென்றும், சிலர் எழுதியதை ஆராய்வாம். பழைய தமிழ் நூலாராய்ச்சியால், இத் தமிழ் நாடெங்கணும் பழைய காலத்திற்பரவியிருந்தது சைவக்கொள்கையேயென்பது புலனாகின்றது. இதற்குப் பண்டை நாள் முதல் நாடெங்கும் அமைக்கப்பட்டிருக்குஞ் சிவபிரான் திருக்கோயில்களும், சிவனடியாரியற்றிய நூல்களுமே சான்றாகும். திருவள்ளுவரியற்றிய திருக்குறளின் கொள்கைகளை நடுநின்று ஆராய்ந்து பார்க்கும் மெய்யறிவாளர்கள், அது சைவக் கோட்பாடுகளைத் தவிர வேறு மதக் கோட்பாடுகளை உள்ளடக்கியது அன்றென்பதை அறிவார்கள். அவர் கடவுள் வழிபாட்டையும், அக்கடவுள் வழிபாடு செய்யும் உயிர்கள் உண்டென்பதையும் வற்புறுத்திச் சொல்லியிருத்தலாற், கடவுளும் உயிரும் இல்லை யென்னும் பௌத்த சமயத்தை அவர் தழுவியவர் ஆகார். மேலும், தாமே கொல்லாமற் பிறர் கொன்ற உயிரைத் தின்னலாமென்னும் பௌத்த சமயக் கொள்கையை மறுத்து,

> "தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
> விலைப்பொருட்டால் ஊன்றருவா ரில்"

என்று அவர் அருளிச் செய்திருப்பதும் அதற்கொரு சான்று.

இனி, உயிர்களுண்டென்று சொன்னாலுங் கடவுளில்லை யென்று மறுக்கும் சமணமதத்தவரும் அவர் ஆகார். மேலும், தலையை மழுங்கச் சிரைக்கும் பௌத்தத் துறவி

களின் வழக்கத்தையும் தலை மயிரை நீட்டி வளர்க்குஞ் சமணத் துறவிகளின் வழக்கத்தையும் மறுத்து,

"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்"

என்று அருளிச் செய்திருத்தலால், அவருக்குப் பௌத்த சமணக் கொள்கைகள் உடன்பாடல்ல வென்பது திண்ணம்.

இனி, உலகம் பொய் யென்றும், நானே கடவுளென்றும் கூறும் மாயாவாதக் கொள்கையும் அவர்க்கு உடன்பாடன்று. ஏனென்றால்.

"நில்லா தவற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை"

என்றும்,

"வளிவழங்கும் மல்லன்மா ஞாலங் கரி"

என்றும்,

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்'

என்றும் அவர் அருளிச் செய்திருக்கும் குறட்பாக்களே அதற்குச் சான்றாகும். உலகம் பொய்யென்னும் கொள்கையுடையராயின் "இல்லா தவற்றை இருப்பனவென்றுணரும்" என்று கூறியிருப்பர். இறைவனே யானென்னும் மாயாவாதக்கொள்கை அவர் நூலில் ஒரு சிறிதுங் காணப்படவில்லை.

இனி, ஊழ்வினையும் மறு பிறப்பும் உண்டென்று அவர் தமது திருக்குறளிற் பல விடங்களிலும் வற்புறுத்தி யிருத்தலால், ஊழ்வினையும் மறுபிறப்பும் இல்லையென்று சொல்லுங் கிறித்துவர் மகமதியரும் ஆகார். மேலும், உயிர்களைக் கொல்லாமையும் ஊனுண்ணாமையும் அவரால் மிகவும் வற்புறுத்திச் சொல்லப்பட்டிருத்தலால், உயிர்க்கொலை செய்தலையும் ஊனுண்ணுதலையுங் குற்றமாக நினையாத கிறித்துவ மகமதியக் கொள்கை அவர்க்குச் சிறிதும் உடன்பா டன்றென்பது தெளியப்படுகின்ற தன்றோ?

இனி, வேள்வியில் உயிர்களைக் கொலை செய்து அவற்றின் ஊனைத் தேவர்களுக்குப் பலியூட்டுதலால் துறக்கத்தையடையலாமென்றுங், கடவுள் முகத்தினின்று பார்ப்பனருந், தோளிலிருந்து அரசருந், தொடையிலிருந்து வணிகரும்,

அடியிலிருந்து சூத்திரருந்* தோன்றினமையால் மக்களுட் பிறப்பிலேயே வேற்றுமை உண்டென்றும் பார்ப்பனர் கூறுங் கொள்கையை மறுத்து.

"அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று"

என்று கொல்லா அறத்தின் மேன்மையும்,

"பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யால்"

என்று எல்லாரும் பிறப்பளவில் வேறுபாடில்லா திருத்தலையும்,

"அந்தண ரென்போர் அறவோர்"

ஆதலையும் ஆசிரியர் வற்புறுத்திச் சொல்லியிருத்தலால் அவர் பார்ப்பனக் கொள்கையைச் சேர்ந்தவரும் ஆகார்.

இனி, மக்களுக்கே பிறவி உண்டென்றும், இறைவன் பிறவி எடாதவனென்றுந், தந்திருவடிகளைச் சேர்வார்க்கும் பிறவியை ஒழிப்பவனென்றும் ஆசிரியர்,

'பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்'

எனத் திருக்குறளிற் சுட்டுரைத்துச் சொல்லுதலின், இறைவனுக்குப் பத்துப்பிறவிகள் கற்பிக்கும் வைணவ மதமும் அவர்க்கு உடன் பாடன்று. மேலும், இவர் இன்பத்துப் பாலிற் கூறுங் காம இன்பநுகர்ச்சிக்குத் திருமாலுலகின் இன்ப நுகர்ச்சியினை உவமையாக எடுத்துக்காட்டுதலால் மனமொழிகளுக்கு எட்டாத இறைவன் அருளின்பத்தைப் பார்க்கிலுந் திருமாலுலகின்பந் தாழ்ந்த தொன்றாகவே கருதினரென்பது இனிது விளங்குகின்றது. (தொடரும்)

---

## சேதுபதிகளும் அவர்களுடைய நாணயங்களும்

[1915ல் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் கூட்டத்தில் வித்வசிகாமணி ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை அவர்கள் ஆங்கிலத்தில் எழுதி வாசித்ததை, திருவையாறு, வடமொழிக்கல்லூரி வித்வான் G. சோமசுந்தர தேசிகர் அவர்கள் மொழிபெயர்த்து

அனுப்ப, அண்ணுமலை யூனிவர்ஸிடி, தமிழ் மொழியாராய்ச்சிக் கழக வித்வான், E. S. தியாகராஜ தேசிகர் அவர்கள் பார்வையிட்டுப் பரிசோதித்துச் செல்விக்கு அனுப்பியது.]

இந்திய டென்மார்க் சரித்திர ஆராய்ச்சி சம்பந்தமாய்த் தரங்கம்பாடியிலும் அதன் சுற்றுவட்டத்திலும் உள்ள இடங்களில் வழங்கிய நாணயங்களைத் தேடிப் பார்க்கையில் பல விதமான சேதுபதி நாணயங்கள் எனக்குத் தென்பட்டன இராஜா தினகர பகதூர் அவர்கள் 1904-5-ல் தரங்கம்பாடிக்கு வந்து தங்கியிருந்த காலத்தில் தன் வம்சத்தார் நாணயங்கள் வடக்கே காவிரி சங்கமம் வரையில் பரவி வழங்கி வந்திருப்பதை நோக்க அவர் அதிக வியப்பும் சந்தோஷமும் அடைந்தார். நான் தங்கியிருந்த பிரதேசங்களில் இத்தகைய நாணயங்கள் வழங்கப்பெற்ற விஷயம், தமிழ்நாடு பூராவும் வியாபாரமும் தொழில் முறையும் வெகு தூரம் பரவும்படி செய்த, ஆற்றலும், தமிழ் இலக்கிய அபிவிருத்தியில் மிக்க கவனமும் உடையவர்களாய் இருந்த பூர்வ வம்சத்தாரின் சரித்திரத்தை நன்கு ஆராய்ச்சி செய்தல் வேண்டும் என்ற ஆர்வத்தை எழுப்பியது. மதுரையில் உள்ள தமிழ்ச் சங்கத்தின் தூண்கள் போன்றவர்கள் சேதுபதிகள் என்று நான் சொல்லத் தேவையில்லை.

1889-90-ல் வெளிவந்த இலக்கியம் 'ரஸாயனம் பற்றிய சென்னைப் பத்திரிகையில், 'சேதுபதி நாணயங்கள்' என்ற ஒரு கட்டுரையில் ஜேம்ஸ். இ. ட்ரேஸி என்ற பாதிரியார் ஒருவர், இத்தகைய நாணயங்கள் பரவியிருந்ததைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். வடக்கே தஞ்சாவூர் வரையிலும், அந்நாணயங்கள் இங்கும் அங்குமாகக் காணப்பட்டதாம். ஆனால் வடக்கே அவ்வெல்லைக் கப்பாலும் சில காலங்களில் காணப்பட்டன வென்பது எனது கொள்கை. கொள்ளிட முகத்துவாரத்துக் கருகாமையிலுள்ள சீர்காழிக்குப் பத்து மைல் வடகிழக்கில் உள்ள, தேவிகோட்டை என்ற தீவிலும், ஆச்சாள் புரத்திலும், சேதுபதி நாணயங்களைக் கண்டிருக்கிறேன். அந்த இடங்களில் 1749-ல் மேஜர் லாரென்ஸ் தலைமையின் கீழ் இங்கிலீஷ் பட்டாளத்துக்கும் தஞ்சாவூர் துருப்புகளுக்கும் போர் நிகழ்ந்தது. அன்றியும் 1760-ல் ஆங்கிலேயர்களுக்கும், ப்ரெஞ்சுக்காரர்களுக்கும் அவ்விடங்களிலேயே சண்டை நடந்தது. தெற்கே மதுரையிலும், அதைச் சுற்றிலுமுள்ள இடங்களிலும், திருநெல்வேலியில் தூத்துக்குடி காயில் வரையிலும் பல வகையான நாணயங்கள் அபரிமிதமாக அகப்பட்டன. இலங்கைத்தீவின் வடபாகத்தி

விருந்து சேதுபதி நாணயங்கள் கிடைத்ததாக ப்ரின்ஸெப்ஸ் ரைஸ் டேவிட்ஸ் எழுதியிருக்கிறார்கள். ஆகவே, 8° — 30′ முதல் 11° — 14′ வட அக்ஷரேகைக்கும் 77° — 41′ முதல் 74° — 51′ கீழ் தீர்க்க ரேகைக்கும், மத்தியிலும், திருச்சியையும் திருநெல்வேலியையும் சேர்த்துக் கொள்ளிடத்தின் வழியாக முகத்துவாரத்தின் வரை செல்லும் கோட்டிற்குத் தென் கிழக்கேயும், உள்ள பிரதேசங்களில் அந்நாணயங்கள் காணப்பட்டன. இலங்கையில் 80° — 82′ கீழ் தீர்க்க ரேகைக்கும் 8° — 10′ வட அக்ஷரேகைக்கும் இடையிலுள்ள இடங்களில் அந்நாணயங்கள் காணப்பட்டன. இவ்வாறு அந்த நாணயங்கள் விஸ்தாரமாய்ப் பரவி வழங்குவது இப்பிரதேசங்களை யாளும் அதிகாரிகளின் ஆதிக்கத்தாலும், இராஜாங்கத்துக்குட்பட்ட கடற்கரை நாட்டில் உள்ள ஜனங்கள் செய்யும் வியாபார முயற்சியாலும் என்றே சொல்ல வேண்டும். மற்றும் இராமேஸ்வரம் என்பது தொன்று தொட்டு பேர்பெற்ற யாத்திரை ஸ்தலமாய் இருப்பதால் இந்நாணயங்கள் அவைகட்குரிய சேதுபதி ராஜ்யத்தின் எல்லையை வெகுதூரம் பரவி வழங்குவதற்குக் காரணம் என்னலாம்.

சேதுபதி சமஸ்தானம் என்பது தற்காலத்தில் உள்ளபடி 9° — 6′ முதல் 10° — 6′ வட அக்ஷரேகைக்கும், 77° — 56′ முதல் 79° — 19′ கீழ் தீர்க்க ரேகைக்கும் இடையிலுள்ள, இராமநாதபுரம் ஜில்லாவுக்குத் தெற்கிலும், கிழக்கிலுமுள்ள சாசுவத ஜமீன் நாடு. அது 2104 சதுரமைல் விஸ்தீரணமும், ஏறக்குறைய 750,000 ஜனத்தொகையையும் உடையது. அது இராமநாதபுரம், திருவாடானை, பரமக்குடி, திருச்சுழி, முதுகுளத்தூர் ஆகிய ஐந்து ஜமீன் தாலுக்காக்கள் அடங்கியது. இராமநாதபுரம் ஜில்லாவைச் சார்ந்துள்ள கடற்கரை முழுமையும் இந்த ஜமீனைச் சேர்ந்ததே. பெரும்பாலும் அடுத்தடுத்து ஒரே பொட்டை வெளியாயும், களர் நிலமாயும் இருத்தலின் விளைபொருளென்பதே யில்லாத பூமியாகும். பனை யொன்று தான் அவ்விடத்திய கருப்பொருளாகும். வைகை, குண்டாறு என்ற நதிகள் பாய்ந்து கொஞ்ச நிலங்களை விவசாயத்துக்குரியதாகச் செய்கின்றன.

இந்த ஜமீனைச் சேர்ந்த இராமநாதபுரம், இராமேசுவரம் ஆகிய இரண்டுந்தான் மனோகரமாயுள்ள முக்கிய ஸ்தலங்கள். இந்நாட்டுக்கும் இலங்கைத் தீவுக்கும், இருப்புப்பாதை, படகு சம்பந்தமிருப்பதின் பலனாக வியாபாரம் இனி ஓங்கு

வதற்கிடமுண்டு. பாம்பன், நாகப்பட்டின துறைமுகத்தோடு போட்டியாக இருப்பதில் தாழ்ந்ததல்ல.

சேதுபதிகளாகிய தலைவர்கள் முற்காலத்தில், தங்கள் பரிபாலிப்பின் கீழ், இப்போதிருப்பதை விட, அதிக விஸ்தீரணமுள்ள நிலங்களை உடையவர்களா யிருந்தார்கள். தற்போதுள்ள சிவகங்கை சமஸ்தானமும், புதுக்கோட்டை சமஸ்தானமும், இந்த இராமநாதபுர ஜமீனைச் சேர்ந்திருந்தன. இவ்விரண்டும், ஒவ்வொன்றாய் அந்த ஜமீனிலிருந்து விலகிக்கொண்டன. கீழ்க்கண்ட இராஜாங்க சரித்திர வரலாற்றில், இப்பிரிவின் காரணமும் விதமும், குறிப்பிடப்பட்டிருக்கின்றன. சேதுபதிகளின் ஆட்சி வடக்கு இலங்கை,தென் மைசூர் முதலிய நாடுகள் வரையில் பரவியது நீடித்திருக்கவில்லை. சொற்பகால மாத்திரம் இவர்கள் சேனை தங்குமிடமா யிருந்தன.

சேதுபதிகள் என்பவர்கள்,மறவர்கள்என்ற ஒரு பலிஷ்ட ஜாதியாரின் தலைவர்கள். மறவர்களோ,கலப்புத் திராவிடர்கள். திராவிடர்கள் என்ற பதம், லெமூரியா முதல் நாகபுரி வரையிலுள்ள அக்காலத்தின் தென்னிந்தியா சமபூமியில் வசித்தவரை நாகர்களின் சந்ததியார் என்ற பொருளில், உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. அவர்கள் பண்டைய காலத்திலிருந்த தமிழகத்தின் குடிகள். சிறந்த விற்பன்னர்கள். மனிதநூல், பூர்வசரித்திரம், சிற்பசாஸ்திரம் இவைகளின் ரீதியாகச் சிறந்த புலவர்கள் செய்துள்ள ஆராய்ச்சிக் கெட்டியவரையில், மறவர்கள், லெமூரியா என்னும் மகேந்திரகண்டம்வரை, தெற்கே பரவிய இந்தியாவின் சுதேசிகள் என்றே நாம் சொல்ல வேண்டும் மறவர்கள் மேற்கண்ட எல்லைகளுக்கப்பாலிருந்து, இந்தியாவுக்கு வந்ததற்கு நம்பத்தகுந்த சான்றுகள் ஒன்றேனும் இதுவரையில் ஏற்படவில்லை. செழுமையான நிறங்களைத் தேடியோ, இயற்கை நிலப்பாங்கினாலோ தங்கள் தங்கள் நாட்டிற் குள்ளேயே இடம்விட்டு இடம் பெயர்ந்திருக்கலாம். பூர்வீக இந்துக்களுக்குப் புலப்பட்டவரையில், இவைகள் அந்நியதேசவாசிகளின் குடியேற்றமல்ல.

ஸ்தலங்களை நிலைநாட்டுவதற்கும், தேசங்களின் எல்லைகளை வரையறுப்பதற்கும், உதவும்படியான பண்டைய பூகோள சாஸ்திர விஷயத்தில். உபயோகமா யிருப்பதால், நான் குறிப்பிடும் புராணங்களில் கண்டபடி, பூமியானது மரஞ்செடி வகைகளைக் கொண்டு ஸப்தத்வீபங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இவைகளில் ஒன்று ஜம்புத்வீபம். மேரு

மலைக்குத் தென்பாலுள்ளது. இந்த த்வீபமும், மனிதநூல், இராஜாங்கநூல் இவைகளைக்கொண்டு ஒன்பது வருடங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இமயமலைக்குத்தெற்கில், (ஷெக்கல் லெமூரியா அல்லது இந்து ஆப்பிரிக்காக் கண்டத்தில்) மஹேந்திரம் வரையிலுள்ள பூமிக்குப், பாரதவர்ஷம் எனப் பெயர். இந்தப் பூமியில் கிழக்கே கிராதர்களும், தெற்கே நாகர்களும், மேற்கில் யவனர்களும் வசித்து வந்தார்கள். ஆரியநாட்டிலும்,அக்கேடிய ராஜ்யம் உள்பட்ட மத்தியபாகத்திலும், ஸ்பஷ்டமான நான்கு ஜாதியாரும் வசித்து வந்தனர். அவர்களுடைய குடிகளும் சிறந்து விளங்கினர். பரதர்கள் பேசிய பாஷைகளில் முக்கியமானவை இரண்டு; வேறு தனி பாஷைகள் பதினாறு. பரதநாட்டு ஜனங்கள் பேசியபாஷை தென் மொழியும் அது சம்பந்தமான பாஷாந்தரங்களும். அவர்கள்தான், இந்தியாவின் தென்பாகத்திலுள்ளவர்கள். இத்தென்னாட்டுப் பரதர்கள், அந்நியர்களுடனாவது, வட பரதர்களுடனாவது கலந்து பழகினதாலுண்டான அப்பிட்டமான (pure) அல்லது கலப்பான திராவிடர்கள் என்ற பெயரால் தற்கால ஆசிரியர்கள் மனதில் பட்டபடி அழைக்கப்பட்டார்கள். அக்கருத்தைக் கொண்டே நானும் அப்பெயரை இங்கு உபயோகிக்கிறேன். வடபாஷையைப் பேசிய பரதர்களின் மிகுதியாயிருப்பவர்களும், வடபரதர்கள் அந்நிய ஜாதியாருடன் கலந்து வாழ்ந்ததாலுண்டானவர்களும், இக்காலத்தில், கௌடம் என்ற பெயரால், அழைக்கப்படுகிறார்கள். வேத நூல்களில் வருகிற திராவிடர்களுடைய முன்னோர்களும், கௌடர்களுடைய முன்னோர்களும், ஆரியர்கள் என்ற பெயரால், அழைக்கப் படுகிறார்கள். திராவிடம் (திரமிளம்) என்பது சிவஞானசுவாமிகள் சொல்கிறபடி எல்லா நன்மைகளை வளர்த்தும், எல்லாத் தீமைகளைக் களைந்தும், இனிமையாயுள்ள பாஷையாகிய தமிழையுணர்த்தலாயிற்று. இத்தமிழுடன் ஆந்திரம், கன்னடம், மராத்தி, குஜராத்தி ஆகிய வேறு நான்கு பாஷைகளும் சேர்ந்த தென்தேசப் பிராகிருதமாகிய பஞ்சதிராவிடம் என வடநூல் வியாகரணிகள் (அணியிலக்கணக்காரர்கள்) பெயரிட்டிருக்கிறார்கள். தற்கால ஆசிரியர்கள் (புலவர்) திராவிடம் என்றபதம் தமிழும், அதனின்றும் கிளைத்த மலையாளம், துளுவம், தெலுங்கு, கன்னடம் ஆகியவை சேர்ந்த தொகுதியை யுணர்த்துவதாகச் சொல்கிறார்கள். திராவிடம் என்னும் தேசம் சோழ, பாண்டிய, கேரள, ஆந்திர நாடுகளினின்றும் வேறான பிரத்யேகப் பிரதேசமாய் இருந்து வருகிறது. திராவிடம், திரமிடம் என்பவை 'தமிழ்' எனச் சிதைந்ததாகக்

கொண்டு தமிழ் பேசப்படும் பிரதேசம் எல்லாவற்றிற்கும் திராவிடம் என்பது பொதுப்பெயர் என எண்ணலாயிற்று. ஹேமச்சந்திரர் என்ற வடமொழி நிகண்டாசிரியர் திராவிடம் என்ற பதத்திற்கு ஓடி வளைந்தது என்று தாதுப்பொருள் சொல்லியிருக்கிறார். வடமொழி நாடக ஆசிரியர், அது மஹாநதிக்குத் தெற்கிலுள்ள பூமியைக் குறிப்பதாகக் கூறியிருக்கிறார். திரமிளம் என்ற வேறொரு சொல் உண்டு. அது சர்ப்பன ஆணுக்கும், க்ஷத்திரியப்பெண்ணுக்கும் பிறந்த ஒரு குலத்தவரைக் குறிப்பதால், திராவிடம் என்பதும், திரமிளம் என்பதும் ஒன்றெனை மயங்கலாகாது.

மறவர்கள் எனப்பட்டார் அக்காலத்திய இந்தியா கண்டத்தின் தென்பாகத்தினின்றும், வடக்கு நோக்கிச் சென்று குன்றுகளில், குடியேறி வசித்துவந்த குறவர், வேடர், வேட்டுவர், இருளர் ஆகிய இவர்களைக் குறிக்கும். மிலேச்சர் அல்லது அயன் நாகஜாதியாரைச் சேர்ந்தவர்க ளல்லர். சர்ப்பலோகத்திலுள்ள நாகர்கள் நரகவாசிகள். இவர்களுக்கும், தேவலோகவாசிகளுக்கும், பூலோக மனிதனுக்கும், உள்ள சம்பந்தம் மறைபொருளான விஷயம். நமது வேதநூல்களில் காணப்படும் அப்பேர்ப்பட்ட வாக்கியங்களுக்குத் தற்கால வித்வான்கள் சொல்லியிருக்கிறபொருள்கள் கவனித்துப் பார்த்து நீக்கத்தக்கவைகள். அவைகள் சரித்திர சம்பந்தமான சில புராண கதைகள் என்பதற் கையமில்லை. மேற்கண்ட கேவலம் புராண கதைகளிலிருந்து உயர்ந்த வேதசார ஜீவாதாரமான மற்ற சாஸ்திரங்களைக் கவனமாய்ப் பிரித்தறிய வேண்டும்.

மிலேச்ச நாகர் என்பவர் வெகுகாலங் கழித்தே சோழநாட்டுக்கு வந்தவர்கள். இவர்கள் வருவதற்கு முன்னமேயே மறவர்கள் இருந்ததாகக் கேள்விப்படுகிறோம். மறவர்கள், கள்ளர், பரவர் முதலிய தமிழ்நாட்டு ஆண்மையுள்ள வீரஜாதியாரைச் சேர்ந்தவர்களே. கர்ண பரம்பரையான பண்டைய புராண கதைகளைப் படித்தால் இச்சாதியார்க்குள்ள வித்தியாசங்கள் நன்கு புலனாகும். மறவர்கள் துர்க்க வம்சத்தவர் என்றும், கள்ளர்கள் அகல்ய வம்சம் என்றும், சொல்லிக் கொள்ளுகிறார்கள், நாகபட்டினத்தைத் தலைநகராகக் கொண்ட பன்றி நாட்டில் வசிக்கும் மறவர்கள் நகரப் பெயரால் நாகர்கள் என்றழைக்கப்பட்டார்கள். இந்நாகர்களில் ஒரு வகுப்பினருக்கு ஒலியர் அல்லது ஒலிநாகர் எனப் பெயர். இந்த ஒலியர்கள் இராஜத்துரோகிகள் என்று கண்டவளவில் முதலாவது கரிகால்சோழன் அடக்கி ஆண்டான். இந்த

ஒலியர்களின் தலைவர்களை நச்சினார்க்கினியர் பட்டினப் பாலையில் ஒலியர்கள் என்றழைக்கப்படும் வேளாளர்கள் என்று சொல்லியிருக்கிறார். இந்த நாகர்கள் வேளிர்களின் நடையுடை பாவனைகளை அனுசரித்ததை முன்னிட்டு நாளடைவில் வேளாளர்களின் வழிநடையாளர்கள் என வழங்கப் பெற்றனர். (தொடரும்)

---

# சதுரங்கம்

[இராவ் சாஹிப் C.M. இராமச்சந்திரஞ் செட்டியார் எழுதியது]

சதுரங்கம் என்பது புத்தியைச் செலுத்தி விளையாடும் ஒரு விளையாட்டு. இது வெகு பழைமையானது. இதனுடைய ஆதியை இதுவரை செவ்வையாய் அறிந்து கொள்ளக் கூடவில்லை. உலக முழுவதிலும் நாகரிகம் பெற்ற நாட்டார்களால் அது விளையாடப் பெற்று வருகிறது. அவ்விளையாட்டினால் நகைச் சுவையாவது உல்லாசமாவது அதிகமாக இருக்காது. ஆனால் ஏனைய கடினமான வேலைகளைச் செய்யும் போது மனிதர்க்குச் சற்று ஆறுதல் கொடுப்பதற்காக இவ்விளையாட்டை விளையாடுவார்கள். பொதுவாக, புத்தியை செலுத்தக் கூடிய விளையாட்டாக இருந்தாலும் இதர வேலைகளைச் செய்து மனது களைப்பும், சோர்வும் அடைத்திருந்த போது இவ்விளையாட்டை எடுத்துக் கொண்டால் வேறுவிதமாகப் புத்தியைத் திருப்புகிறதினாலே மனது சாந்தி அடையும். உலக விசாரமும் அதனால் ஏற்படும் துன்பங்களெல்லாம் சிறிது நேரம் மறந்து போகும்படியாக இவ்வாட்டம் விளையாடுபவனைச் செய்யும். உலகக் கவலைகள் ஒரு மனிதனை ஒரு புறமாக இழுக்கும்போது இவ்விளையாட்டில் இறங்கி விட்டால் அவனுடைய மனதை அது தன்பக்கத்தில் இழுத்துக் கொண்டு செல்லும். அதனால் உண்டாகும் உற்சாகத்தினால் முந்தி ஏற்பட்ட கவலைகளெல்லாம் அச்சமயத்திற்கு மாயமாய்ப் போய்விடும். இவ்வாட்டம் ஆட ஆரம்பித்தால் எவ்விதமாக நாம் எதிரியை ஜெயிப்போம் என்ற எண்ணமே ஆடுபவன் மனதில் குடிகொண்டிருக்கும். இவ்வித ஆலோசனையில் உலகமே மறந்துவிடும்.

சதுரங்கம் என்பது ஒரு கடினமான விளையாட்டு என்று அநேகர் நினைப்பார்கள். அது சரியல்ல. அவ்வாட்டம் தெரியாதவனும் அதனைச் சிறிது நேரத்தில் பழகிக் கொள்ளலாம்.

ஆனல் அதனுடைய முழுநிலைமையும், நுணுக்கமும் தெரிவதற்கு அதிக பழக்கம் வேண்டும். சுறுசுறுப்பாகக் கற்றுக் கொள்வதானல் ஆறு மாதத்திற்குள் அது முழுவதையும் கற்றுக் கொள்ளலாம். ஆனல் நன்ருய்க் கற்றவனே ஆட்டத்தில் வெற்றி அடைவான் என்று சொல்ல முடியாது. வெற்றியானது அவனவன் மனதின் போக்கிற்கு ஒத்ததாக இருக்கிறது. ஆட்டத்திலேயே நோக்கம் கொண்டு மன அமைதி உள்ளவன் மிகவும் அறிவாளியாயிருந்தால் விரைவில் கோபிக்கக் கூடியவனை எளிதில் ஜெயிக்க முடியும். ஆகவே இவ் வாட்டத்திற்கு மன அமைதி முக்கியமானது.

இவ்வாட்டம் பல தேசங்களில் பல விதங்களாக ஆடப்பட்டு வருகின்றது. ஆனல் எல்லா ஆட்டங்களிலும் அடிப்படையான கொள்கை ஒன்றே. இவ்வாட்டத்தை இரண்டு பேர் ஆடுவார்கள். ஒரு பக்கத்திற்கு 8 வீடுகள் ஆக 64 வீடுகள் கொண்ட ஒரு பலகையில் ஆடப்படும். அவ்வீடுகள் ஒன்று விட் டொன்று வெள்ளையாகவும் கறுப்பாகவும் இருக்கும். ஒருவன் கறுப்புக் காய்களையும் மற்றவன் வெள்ளைக் காய்களையும் வைத்துக்கொண்டுஆடுவார்கள். ஒவ்வொரு புறத்திலும் 16 காய்கள் இரண்டு வரிசைகளில் வைக்கப் பெற்றிருக்கும். காய்களை ஒவ்வொன்ருக எதிர்ப் புறமாக நகர்த்தி, எதிரியின் காய்களை அடிக்கவேண்டும். எதிரியை ஆட முடியாமல் செய்து விட்டால் வெற்றி ஏற்படும்.

நமது நாட்டில் இவ்வாட்டத்திற்குச் சதுரங்கம் என்று பெயர். சதுரங்கம் என்ருல் நால் வகைச் சேனை என்று பொருள். அவை யாவன: இரதம் (தேர்), கஜம் (யானை), துரகம் (குதிரை), பதாதி (காலாள்) என்பவைகள். ஒவ்வொரு புறத்திலும் ஒவ்வொரு அரசனும் அவனுக்கு ஒரு மந்திரியும் இருப்பார்கள். அவ்வரசனுக்கு இரண்டு யானை, இரண்டு குதிரை, இரண்டு ஒட்டகம், எட்டு காலாள் இருப்பார்கள். ஆகவே இவ்வாட்டத்தில் ஒரு அரசன் தன் சேனையுடன் மற்ருெரு அரசனேடும் அவன் சேனையோடும் போர் புரிவது நோக்கமாகும். சாதாரணமான யுத்தத்தில் ஒவ்வொரு அங்கத்திற்கும் விதம் விதமாக பலமும் சாமர்த்தியமும் எவ்வாறு இருக்குமோ. அதைப்போலவே இந்த ஆட்டத்திலும் ஒவ்வொரு காய்க்கும் அதற்கு ஏற்றபடி பல இருக்கும். காலாட்கள் முன்னேக்கி மாத்திரம் செல்லலாம். மற்ருெரு காலாளை மாத்திரம் அடிக்க முடியும். யானை எதிரே மாத்திரம் சென்றடிக்கும். குதிரை குறுக்காகவும் போகும். ஒட்டகம் ஒன்று விட்டு ஒன்று போகும். மந்திரியும் அரச

னும் எல்லா இடங்களினும் செல்லலாம். இவ்விதிகளைத் தவிர இன்னும் பல விதிகள் உண்டு. இவ்விதிகள் நாம் முன்னமே சொன்னபடி தேசத்திற்கு ஏற்றாற்போல் மாறியிருக்கும். முன் காலத்திலிருந்த பல விதிகள் இக்காலத்தில் மாறியிருக்கின்றன.

ஐரோப்பாவில் ஆடும்படியான சதுரங்கத்தில் காய்களின் பெயர்கள் மாறியிருக்கின்றன. அரசனுடைய பெயர் அதுவே. மந்திரியை அவர்கள் இராணி (queen) என்று சொல்லிப் பெண்பாலாக்கிவிட்டார்கள். ஒட்டகம் ஐரோப்பாவி லில்லாததினால் அதனை மதகுரு ஆக்கிவிட்டார்கள். குதிரைக்குப் பதிலாக குதிரையின் மேல் ஏறிவரும் போர் வீரனாக்கி விட்டார்கள். யானை என்பது ஐரோப்பாவில் காணாத மிருகமாகையால் யானையைப் போன்ற பலமும் அரணும் வாய்ந்த துர்க்கம் அல்லது கோட்டை ஆக்கி விட்டார்கள். மற்ற எட்டு காலாள்களும் அங்கேயும் காலாள்களாகவே இருக்கிறார்கள். காய்களினுடைய பெயர்கள் மாறினது மாத்திரமேயன்றி ஆட்டத்தினுடைய விதிகளும் பல மாறி யிருக்கின்றன. அவைகளை விவரித்து எழுதினால் மிகப் பெருகும் ஆகையால் இங்கே எழுதவில்லை.

ஐரோப்பாவிலும் பல தேசங்களில் பலவாறாக இவ் வாட்டம் இருக்கக் காண்கிறோம். இவ் வாட்டத்தின் விதிகளை நன்றாக ஆராய்ந்து எழுதின புஸ்தகங்கள் பல ஐரோப்பிய பாஷைகளில் உண்டு. இதற்காகத் தனியான சபைகளும் அங்கங்கே ஏற்படுத்தி இருக்கிறார்கள். போட்டிப் பந்தயங்களும் வைக்கிறார்கள். அவ்விதப் பந்தயங்களில் உலகத்தில் பல நாடுகளிலிருந்தும் கைதேர்ந்த நிபுணர்கள் சென்று விளையாடுவார்கள். அப்படிப்பட்ட உலகப்பிரசித்தி பெற்ற போட்டிப் பந்தயங்கள் வருடந்தோறும் ஒவ்வொரு ஊரில் நடந்து வருகின்றன. அதில் வெற்றி பெருகிறவர்களுக்கு விலையுயர்ந்த பரிசுகள் கொடுப்பதுண்டு. சென்ற 80 வருடங்களாக நடந்த பந்தயங்களில் இன்னின்னார் இன்னின்ன பரிசுகள் பெற்றார்கள் என்ற விவரமும் பிரசுரிக்கப் பட்டிருக்கிறது. இன்னின்ன தேசத்தில் இன்னின்ன நிபுணர்கள் இருந்தார்கள் என்பதைப் பற்றியும் விவரமாய் எழுதி யிருக்கின்றார்கள்.

இவ்வித ஆட்டங்களில் ஆடுபவர்கள் நேரேயிருந்து ஆடுவது மாத்திரமேயன்றி ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குக் கடிதப் போக்கு மூலமாகவும் தந்தியின் மூலமாகவும் தம்

எண்ணத்தைத் தெரியப்படுத்தி ஆடுவதும் உண்டு. சிறந்த நிபுணர்கள் சில தடவைகளில் மாதக் கணக்காகவும் வருட வாரியாகவும் முடிவு பெறுமல் ஆடுவதுண்டு. சமீப காலத்தில் பத்திரிகைகளிலும் இவ்வாட்டத்தில் ஒரு சட்டத்தை வெளிப் படுத்திப் பின் ஆடக்கூடிய விதத்தை யார் தெரியப் படுத்துகிறார்களோ அவர்களுக்குப் பரிசு வழங்கப்படுமென்று பிரசுரிப்பதுண்டு. சதுரங்க விளையாட்டிற்காகவே தனிமையான பத்திரிகைகளும் ஏற்பட்டிருக்கின்றன; புத்தகங்களுக்கோ அளவில்லை. கடினமான ஒவ்வொரு கட்டத்தையும் விளக்கிச் சித்திரங்களும் வெளியிட்டிருக்கின்றார்கள். ஐரோப்பாவிலுள்ள ஒவ்வொரு மொழியிலும் ஏராளமான புத்தகங்களைப் பற்பல ஆசிரியர்கள் வெளியிட்டிருக்கின்றார்கள்.

இந்தியா தேசத்தில் சதுரங்கத்தை ஒரு பிரியமான ஆட்டமாக தனவந்தர்களும், உயர்தரக் குடும்பத்தார்களும் கொண்டிருக்கிறார்கள். வெகு பண்டைக் காலத்திலிருந்து இவ்விதமாகவே இவ்வாட்டம் ஆடப்பட்டு வருகிறது. ஆனால் இதனைப்பற்றித் தனியாக எழுதின நூல் ஒன்று இருப்பதாகத் தெரியவில்லை. இவ்வாட்டத்தின் விதிகளெல்லாம் வழக்கத்திலேயே தெரிந்து கொள்ளப்படுகின்றன. அரசர்கள் யுத்தம் செய்யும் காலத்தில் சேனைகளை அணி வகுத்து எவ்விதமாகப் போர் புரிந்தார்களோ அவ்விதமே யுத்தமில்லாமல் அரண்மனையில் வேலையில்லாத காலத்தில் பொழுது போக்கிற்காக அந்த யுத்த ஞாபகம் கொண்ட இவ்விளையாட்டைக் கைக்கொண்டு ஆடிவந்தார்கள். அவ்விதமே அரசனுடைய பரிவார ஜனங்களும் உத்தியோகஸ்தர்களும், தனவந்தர்களும், வியாபாரிகளும் பொழுது போக்கிற்காக இவ்வாட்டத்தைக் கைக்கொண்டிருந்தார்கள். இப்போதுங்கூட அரண்மனைகளிலும், செல்வந்தர் வீடுகளிலும் இவ்வாட்டம் விளையாடப்பட்டு வருகின்றது. இராஜபுதனத்து மன்னர்களுக்கு இவ்வாட்டமானது மனதிற்கிசைந்த ஆட்டமாகும். சில மன்னர்கள் இரவும் பகலும் ஓயாமல் ஆடுவதுண்டு. இவ்விதமாய் ஆடுவதில் யுத்தங்களில் எவ்விதமாகக் கோபமும் தாபமும் உண்டாகுமோ அவ்விதமாகவே இவ்வாட்டத்திலும் ஏற்படுவதுண்டு. சில தடவைகளில் பெருத்த கலகங்களும் கொலைகளும் ஏற்படுவதுண்டு. விளையாட்டு வினையாக முடிவது இவ்வாட்டத்தினுடைய செய்கையாகும். (தொடரும்)

---

# அறிவியற் பகுதி - Science

## பொருள்களின் ஆக்கப்பாடு

[திரு. T. V. அருணசலம் பிள்ளையவர்கள், B. A., (Hons]

(முன் ௧௪௯-ம் பக்கத் தொடர்ச்சி)

முதன் முதல் மின்மயத்தைப்பற்றி ஆராயப்புகுந்தோர் கண்ணாடியாலுண்டாகிற மின்மயத்தை [1] "ஆடிமின்" என்றும் முத்திரை மெழுகிலிருந்து உண்டாவதை [2] "பயின்மின்" என்றும் வழங்கினார்கள். பெஞ்சமின் பிராங்க்லின் [3] என்பவருக்கு மின்மயமானது ஒரு விந்தையான நீர்ப்பொருள் [4] என்று தோன்றிற்று. அவர் கண்ணாடியினால் மின்மயம் ஊட்டப்பெற்ற ஒரு பொருளில் மின்மய நீர் மிகுதியாயிருக்கிறதாக முடிவு கட்டி அதற்கு "மிகுமின் [5]" என்று பெயர் கொடுத்தார் இதற்கு நேர் மாறாக முத்திரை மெழுகினால் மின்மயம் ஊட்டிய ஒரு பொருளில் மின்மயநீர் குறைவாயிருக்கிறதாகத் தீர்மானித்து அதற்குக் "குறைமின்" [6] என்று பெயரிட்டார். வேறுவகையாகக் கூறுமிடத்து இதன் கருத்து, முறையே கண்ணாடி மிகுமின் மயத்தையும், முத்திரை மெழுகு குறைமின்மயத்தையும் உண்டு பண்ணுகின்றன என்பதாம். "மிகுமின்" "குறைமின்" என்னும் குறியீடுகளைப் பார்க்கிலும் "நேர்மின்" "எதிர்மின்" என்பன பொருத்தமுடையன.

சிறிது காலம் செல்ல, மின்மயத்தை ஒரு நீரென கொள்வது நகைக்கிடமான தென்று மக்கள் கருதலாயினர். ஆனால் "மிகுமின்" "குறைமின்" (நேர்மின், எதிர்மின்) என்னும் குறியீடுகளைப் பயன்படுத்தியே வந்தார்கள். இக்காலத்தில் மின்சாரத்தைப் பற்றி நாம் கொண்டிருக்கும் கருத்துக்கள் பிராங்க்லினுடைய "நீர்க்கொள்கையை" [7]ச் சிறிது ஒத்திருக்கின்றன. இதை நாம் நன்கறிய வேண்டுமானால், பரமாணுக்களைப்பற்றிய இக்காலத்துக் கொள்கைகளைச் செவ்வனே தெரிந்து கொள்ளவேண்டும். அதற்கு ஈண்டிடமின்மையின், இயற்கையிலுள்ள பரமாணுக்களிற் சில நேராகவும், வேறு

---

1. Vitreous Electricity.
2. Resinous Electricity.
3. Benjamin Franklin.
4. Fluid.
5. Positive Electricity.
6. Negative Electricity.
7. "Fluid Theory".

சில எதிராகவும் மின்வலி வாய்க்கப் பெற்றிருக்கின்றன என்றறிந்தாற் போதும். ஒன்றற்கொன்று மாறுன மின் சாரமுடைய இரண்டு பொருள்கள் ஒன்றையொன்றுஇழுத்துக் கொள்வதையும் அறிந்திருக்கிறோம். நீரிய வளிப்பரமாணு நேர்மின்மயமுடையது. உயிரிய வளிப்பரமாணு எதிர்மின் மயமுடையது. ஆகையால் இவை யிரண்டும் ஒன்றை யொன்று கவர்ந்து மின்மயப்பாங்கில் ஒன்றி விடுகின்றன. இவ்வொன்றுதலைத்தான் இயைபு[1] என்று கூறுகிறோம். பரமாணுக்கள் எங்ஙனம் மின்சாரம் ஊட்டப் பெறுகின்றன என்று நாம் அறியும் வரை இந்தப் பொதுப்படையான கூற்றை ஏற்றுக்கொள்வதோ டமையவேண்டும்.

இதுவரைக்கும் கூறியன கொண்டு அணுக்களின் ஆக் கத்தைப் பற்றிப் பயனுடையதோர் அகக்காட்சியைப் பெற்றிருக்கிறோம். இருவேறு திறத்த மின்மய முடைய, பகாப் பொருள்களின் பரமாணுக்கள் இயைந்து[2] இடை நிலையிலுள்ள அணுக்கள் உண்டாகின்றன. ஆனால் இந்த அணுக்கள்கூட மிக்க ஆற்றலுடைய உருப்பெருக்கிகளின் உதவி கொண்டும் பார்க்க முடியாதவை. கண்ணுக்குத் தெரியாத நுண்கூட்டைப் பழையபடி நம் நினைவுக்குக் கொண்டு வருவோம். இந்த நுண்கூட்டில் எத்தனையோ கோடி அணுக்கள் இருப்பதையும் ஒவ்வொரு அணுவிலும் பல பரமாணுக்கள் இருப்பதையும் உணர்கிறோம். இதிலிருந்து, ஓர் இரும்புத் துண்டானது கண்ணுக்குத் தெரியாத எண் ணிறந்த பரமாணுக்களால் அமைந்தது என்று கருதுகின்றோம்.

கட்டியானதோர் பொருள் கட்புலனாகாத துணுக்கு களால் ஆக்கப்பட்டிருக்கின்றது என்னும் உண்மை சிலர்க்கு மருட்சியைத் தரலாம். ஆனால் இதில் விந்தை யொன்று மில்லை. நீங்கள் நாட்டுப்புறத்தில் ஓரிடத்தில் நிற்பதாகக் கற்பித்துக் கொள்ளுங்கள். உங்கள் முன்னே மிகப் பரந் ததும், புழுதிபடிந்ததுமான ஒரு பாட்டைச் செல்கின்றதென் றும் வைத்துக்கொள்ளுங்கள். அந்தப் பாட்டைப் பலவளைவுக ளாய்ச் சென்று வெகு தொலைவிலிருக்கிற ஒரு மலையின் அடி வாரத்தைச் சேர்ந்து, அதன்மேல் மலைச்சாரலின் வழியாய்ச் செல்வதாயும் நினைத்துக் கொள்ளுங்கள். பாட்டை வெண்மை நிறமுடையதாயும் அகலமானதாயு மிருப்பதால், அது தொலைவிலிருக்கும் மலைச்சரிவின் வழியாய்ச் செல்வதை நம் கண்களாற் பார்க்கமுடியும். இனி, இந்தப் பாட்டையின் வழியாக மலையை நோக்கி ஒரு மனிதன் நடப்பதைப் பாருங்

1. Chemical combination. 2. Neutral.

கள். அவன் நடந்து செல்லச் செல்ல உருவத்திற் சிறிய வனுய்த் தோற்றுகிறுன். கடைசியில் அவன் அவ்வெண்மை யான பாட்டையில் ஒரு சிறு புள்ளியினளவாகவேனும் கண் ணுக்குப் புலப்படுகின்றுனில்லை. இப்பொழுது, அவ்விசால மான பாட்டையில், மனிதன் எந்த இடத்தில் நம் கண்ணுக்கு மறைந்தானே அந்த இடத்தில் பத்து நாருயிரக் கணக்கான காலாட்கள் அடங்கிய ஒரு பெரும்படை வருகின்றது என்று வைத்துக்கொள்வோம். இப்படை ஓர் இருண்ட படலம் போல் நம் கண்ணுக்குத் தோன்றும். ஆகவே கண்ணுக்குத் தெரியாமல் ஒரு மனிதன் நின்ற விடத்தில் பற்பன்னூருயிரம் மனிதர்கள் தொகுதியாய் நிற்கும்பொழுது அவர்கள் கட் புலனுகின்றுர்கள். இதுபோலவே தான் கண்ணுக்குத் தெரி யாத பரமாணுக்கள் பன்னூறு கோடி சேரும்பொழுது அவற்றின் தொகுதி கண்ணுக்குப் புலனுகின்றது. மேற்கூறிய எடுத்துக் காட்டில் இரும்புக் கட்டியும், அதன் பரமாணுவும். முறையே பெரும்படைக்கும் தனி மனிதனுக்கும் ஒப்பாவன.

நாம் ஓர் இரும்புத் துண்டைக் கையில் எடுத்தால் அதன்கண் அடங்கியிருக்கிற கண்ணுக்குத் தெரியாத அணுக்கள் ஒன்றையொன்று மிகுந்த வலியுடன் இழுத்துக் கொண் டிருப்பதாகத் தோற்றுகிறது. இங்ஙனம் அணுக்களை ஒன்றேடொன்று பிணித்து வைத்திருக்கும் ஆற்றலுக்கு [11] அணுக்கவர்ச்சி என்று பெயர். அணுக்கள் ஒன்றேடொன்று சேர்ந் திருக்கும் வலுவைக் கணக்கிட்டுக் காட்டுவது எளிது. ஏனென்றுல், ஒரு சதுர அங்குலம் குறுக்குப்பரப்புள்ள ஓர் இரும்புப் பட்டையை ஓரிடத்தில் இருபுறமும் இழுத்துப் புய்ப்பதற்குச் சுமார் 25 டண் வலு வெண்டு மென்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. சில எஃகுக் கம்பிகள் சதுர அங் குலத்துக்கு 100 டன் வலுவுடைய ஈர்ப்பையும் தாங்குவன. அணுக்களை வேறு பிரித்துவிட்டோமானுல், பழையபடி அவற் றைப் பொருந்தச் செய்வது கடினம். ஆகையால் அணுக்கள் ஒன்றேடொன்று சேர்ந்து பற்ற வேண்டுமானுல் அவை மிக அண்மையில் இருக்கவேண்டு மென்று தெரிகிறது. கூறு பட்ட இரும்புப் பட்டையின் இரு பகுதிகளையும் நன்றுய்ப் பழுக்கக் காய்ச்சி அடைகல்லின் மேல் பொருந்த வைத்து சம்மட்டியால் அடித்து ஆறவிட்டுப் பார்த்தோமானுல் அவை முன் போல் ஒன்றியிருக்கக் காணலாம். ஆண்டு நிகழ்ந்த தின் தன்மையையறிய நாம் திண் பொருள்களின் ஆக்கத்தை நம் மனக்கிழியில் படமெழுதிக் காணவேண்டும்.

---

11. Molecular attraction.

அணுக்கள், ஒன்றோடொன்று நெருங்கிச் சேர்ந்திருக்கும் சிறு செங்கல்கள் போன்றில்லை. அணுக்களுக் கிடையில் இடைவெளியுண்டென்பதைக் கண்கூடாகக் காட்டமுடியும். எல்லாவகைப் பொருளும்—எத்துணைத் திட்பமுடியதுங் கூட—உண்மையில் 12புரையுடையன வாயிருக்கின்றன. எஃகு, சக்கிமுக்கிக் கல், சலவைக்கல், கண்ணாடி முதலியவெல்லாம் புரையுடையன.

மேலும் கண்ணுக்குத் தெரியாத இவ்வணுக்களின் 13 அனுக்கம்தான் பொருள்களுக்கு வெம்மையைக் கொடுக்கிறதென்றும், இவ்வெம்மையின் ஏற்றத் தாழ்வே வெப்பதட்ப நிலையென்றும் நாம் உணரவேண்டும். 14 நீராவிச் சம்மட்டியினால் ஓர் இரும்புத்துண்டை யடித்தால் இரும்பு அணுக்களை மிக விரைவாய் அனுங்கும்படி செய்யலாம். அது, சிறிது நேரத்திற்குள், நாம் கையினால் தொடமுடியாத அளவு சூடாய்விடுகின்றது. விடாமல் அடித்தால் இரும்புத் துண்டு பழுக்கக் காய்ந்து விடுகிறது. ஒவ்வொரு பொருளிலும் வெம்மை யிருக்கிறது. வெம்மை மிக்க குறைவாயிருப்பின் அது குளிர்ந்திருக்கிற தென்று சொல்லுகிறோம். இங்ஙனம் கூறுவது ஒப்பிடுமுறையாலே யன்றி வேறல்ல. நாம் இருக்கும் அறையினுள்ள காற்று 100°F வெம்மையுடையதென்று வைத்துக்கொள்வோம். இதைப் பொறுக்க முடியாத வெப்பம் என்கிறோம். அதே வெப்பமுடைய வெந்நீரை ஒருவர் நமக்குப் பருகக் கொடுப்பின் "சூடு காணாது" அல்லது "ஆறிவிட்டது" என்கிறோம். குளிர்ச்சியுடையதாக நாம் கருதும் ஒரு பொருளை மேலும் குளிரச் செய்தல் கூடும். ஆகையால் அதில் வெம்மையிருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும். எனவே எவ்வகைப்பட்ட வெப்பதட்ப நிலையிலிருப்பினும் எல்லாப் பொருள்களினுடையவும் அணுக்கள் அனுங்கிக்கொண்டிருக்கின்றன என்று நாம் உணர வேண்டியதிருக்கிறது.

எத்துணைச் செறிவுடைய பருப்பொருளும் தனித்தனி அணுக்களால் ஆக்கப்பட்டிருக்கின்றன வென்பதும் இவற்றினூடே இடைவெளியுண் டென்பதும், இவையொன்றை யொன்று தொட்டுக் கொண்டிருக்கவில்லை யென்பதும், ஓயாமல் அனுங்கிக் கொண்டிருக்கின்றன வென்பதும் மேற்கூறியவற்றால் அறியப்படும்.

---

12. Porous. 13. Vibration. 14. Steam Hammer.

# தமிழ் அளவைநூற் சொற்கள்

[திரு. மா. பாலசுப்பிரமணியம், எம். ஏ.]

(சிலம்பு-௧௪ ஆம் பக்கத்தொடர்ச்சி)

( உரிமை ஆக்கியோர்க்கு )

201. சாதர்மிய சமை—ஒப்பியல்சார் போலி உவமை;
202. வைதர்மிய சமை—வேற்றியல்சார் போலி உவமை
203. உத்கிருஷ சமை—மீவியல்சார் போலி உவமை
204. அபகிருஷ சமை—குற்றியல்சார் போலி உவமை
205. வர்ணிய சமை—புகழுரைசார்போலி உவமை
206. அவர்ணிய சமை—பழியுரை சார்போலி உவமை
207. விகற்ப சமை—இயல்பிறழ்ந்துரை போலி உவமை
208. சாத்திய சமை—துணிபொருள்சார் போலிஉவமை
209. பிராப்தி சமை—அடைவுசார் போலி உவமை
210. அப்பிராப்தி சமை—அடைவின்மைசார் போலி உவமை
211. பிரசங்க சமை—இயலாக்க முற்றொடர்ச்சிப் போலி [உவமை
212. பிரதிதிருஷ்டாந்த சமை—வேற்றெடுத்துக் காட்டுப் [போலி உவமை
213. அநுத்பத்தி சமை—தோற்றமுன் சார்போலி உவமை
214. சம்ஸய சமை—ஐயங்கிளர் போலி உவமை
215. பிரகரண சமை—பிறிதுசார்பு நவில்போலி உவமை
216. அஹேது சமை—சார்பின்மை நவில்போலி உவமை
217. அருத்தாபத்தி சமை—பொருட்கற்பனை சார்போலி [உவமை
218. அவிசேஷ சமை—சிறப்பின்மை சார்போலி உவமை
219. உபபத்தி சமை—கூட்டுக்கற்பனை சார்போலி உவமை
220. உபலப்தி சமை—துணிபொருளுண்மை பிழைத்து நவில் [போலி உவமை
221. அநுபலப்திசமை—துணிபொருளின்மை பிழைத்து [நவில் போலி உவமை
222. நித்திய சமை—அழிவின்மைக்கூற்று சார்போலிஉவமை
223. அநித்திய சமை—அழிவுண்மைக் கூற்று சார்போலி [உவமை
224. காரிய சமை—ஆக்கநிலை போலி உவமை
225. வாக்குச் சலம்—சொல்வன்மையான் பிழைத்துத் தூற் [றல்
226. சாமாநிய சலம்—கல்வி வன்மையான் பிழைத்துத் தூற் [றல்

227. உபசார சலம்—நுணுக்கம் பிழைத்துணர்ந்து தூற்றல்
228. விசேஷண சித்தம்—பண்பியல் முடிவிலாச் சார்பு
229. விசேஷியா சித்தம்—பொருண்மை முடிவிலாச் சார்பு
230. அசமர்த்த விசேஷண சித்தம்—முறைபிறழ் பண்புச் [சார்புப் போலி
231. அசமர்த்த விசேஷியா சித்தம்—முறைபிறழ் பொருண் [மைச் சார்புப் போலி
232. பிரகரண சமம்—இருமை சார் சார்புப் போலி
233. காலாத்திய யாபதிட்டம்—காலப்பிழைபாட்டுச் சார் [புப் போலி
234. பாதித விஷயம்—காலப் பிழைபாட்டுச் சார்புப் போலி
235. விஷயபரி சோதகம்—தொடர்பு சார்ந்த கழித்தறிதல்
236. வியாப்திக் கிராககம்—நிறைவு சார்ந்த கழித்தறிதல்
237. ஆத்மாசிரயம்—தற்பற்றிக் கழித்தறிதல்
238. அந்யோந்யாசிரயம்—இருமைச் சார்புபற்றிக் கழித் [தறிதல்
239. சக்கிரிகை—பன்மைச்சார்புபற்றிக் கழித்தறிதல்
240. அநவஸ்தை—முடிவின்மை
241. பிரமாணபாதிதார்த்தப் பிரசங்கம்—அளவை கழிந்த [பொருண்மைப்பேறு
242. இதரேத ராசிரியம்—இருமைச் சார்பு பற்றிக் கழித்தறி [தல்
243. வியாகாதம்—இருபண்பு முரணிலே
244, பிரதி பந்தி—ஐயவடைவு அமைதி
425. கற்பனுலாகவம்—பொருட் சிறுமைக் கற்பனை
246. கற்பனு கௌரவம்—பொருட்பன்மைக் கற்பனை
247. வைஜாத்தியம்—கேள்வி யடைவின்மையான் வெற்றென [விருத்தல்
248. சர்வதந்திரம்—முழுதும் உடன்பாட்டு முடிபு அல்லது [யாவருங் கொண்ட உடன்பாட்டு முடிபு
249. பிரதிதந்திரம்—சார்பி னுடன்பாட்டுமுடிபு அல்லது [ஒருசா ருடன்பாட்டு முடிபு
250. அதிகரணம்—இருமைச் சார்பி னுடன்பாட்டு முடிபு
251. அபியுபகம்—பிறிதுகோ ளுடன்பாட்டு முடிபு
252. சாதர்மிய திருஷ்டாந்தம்—ஒத்த பண்பின் எடுத்துக் [காட்டு
253. வைதர்மிய திருஷ்டாந்தம்—வேற்றுப்பண்பின் எடுத்துக் [காட்டு

(தொடரும்)

217

# மதிப்புரை

"தஞ்சைப் பெருங்கோயில்":—தஞ்சை அரண்மனைக் கோயில் வட்டம் கண்காணிப்பாளர் திரு. ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை பி. ஏ., பி. எல்., எழுதியது. சென்னைப் பொருட்காட்சிச் சாலைக் கண்காணிப்பாளர் எஃப். எச். க்ரேவ்லி அவர்கள் எழுதிய முகவுரையுடன் கூடியது. . அழகாய் அச்சிட்டுக் கட்டப்பட்ட ஆங்கில நூல். 89 பக்கங்களும் 25 நிழலுருப்படங்களுங் கொண்டது. விலை ரூ. 1. தஞ்சை மாநகரின் பண்டைப் பெருமையை நன்கு விளக்குவது. வெளிநாட்டார்கட்கும், ஆராய்ச்சியாளர்கட்கும் பெரிதும் பயன்படுவது. "செந்தமிழ்ச் செல்வி" நிலையத்திற் கிடைக்கும்.

* * *

"பேரம்பலப்புலவர் நினைவுமலர்":—யாழ்ப்பாணத்து வேலணையூரின்கண் பிறந்து தமிழ்ப்புலமை சிறந்து தம் எழுபத்தைந்தாம் வயதிற் காலஞ்சென்ற திரு. கோ. பேரம்பலப்புலவர் நினைவிற் கறிகுறியாக அவர் தௌகித்ரரும் மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமையாசிரியருமாகிய பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் அவர்களால் வெளியிடப்பட்டது. புலவரது வரலாறும், அவர் இயற்றிய "வண்ணைச் சிலேடை வெண்பா" "வேலணை இலந்தைக் காட்டுச் சித்திவிநாயகர் இரட்டை மணிமாலை" ஆகிய இரண்டும், மற்றும் புலவர்மீது அவர்தம் மாணவர்களும், அன்பர்களும் பாடிய இரங்கற்பாக்களும் கொண்டது. அழகிய சிறுநூல்.

"நரவாகன தத்த சரிதம்":—இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை, ச. சோமசுந்தர தேசிகர் அவர்கள் இயற்றியது. 74 பக்கங்கள் கொண்டது. 20 பக்கங்கள் கொண்ட "உதயணன் சரிதை"யை இணைப்பாய்க் கொண்டது. விலை அணா 10. கிடைக்குமிடம்: சதாசிவம் பிரதர்ஸ், மயிலாப்பூர், சென்னை.

குணாட்டியர் பைசாச மொழியில் எழுதிய பிருகத்கதையையொட்டித் தமிழில் எழுந்த பெருங்கதை உதயணன் வரலாறு கூறுவதாகும். அவ்வுதயணனுடைய மகனும் வித்தியாதர அரசனுமான நரவாகன தத்தன் வரலாறு கூறுவது இந்நூல். நூலாசிரியரின் எளிய இனிய தமிழ் நடை போற்றத்தக்கது.

"வேளாண்மைக் கடன்":—திரு. பா. நடராஜன், எம். ஏ., அவர்கள் தமிழில் எழுதிய மொழிபெயர்ப்பு. 76 பக்கங்கள் கொண்ட அழகிய நூல். விலை ரூ. 1

பயிரிடுங் குடி மக்கள் கடன் நிலையைக் குறித்துப் புள்ளி விவரங்களோடு ஆய்ந்தெழுதப்பட்ட ஆராய்ச்சி நூல். தமிழ் நாட்டாரால்

படிக்கப்பட வேண்டிய ஒரு நூல். இதைப்போன்று தற்கால வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டப்படும் பல நூல்கள் மேலும் மேலும் வெளிவருதல் வேண்டும். இந்நூல் கிடைக்குமிடம்: D. M. ராசப்ப உடையார். 48B முதல் தெரு, புதுப்பேட்டை, மவுண்ட்ரோட், சென்னை.

"ஸ்வயம்பிரகாச விஜயம்":—வரகவி திரு. அ. சுப்ரமணிய பாரதி எழுதியது. ஸ்வாமிகள் வரலாறும், அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய அரிய உபந்யாஸங்கள், பிரஸ்னோத் தரமாலிகா முதலியவை அடங்கியன. இந்நூலை வெளியிட்டவர் ஸ்வாமிகளின் சிஷ்யராகிய துரியானந்த ஸ்வாமிகள். இதன் விலை ரூ. 2-8-0 கிடைக்குமிடம்: விசாக விஜயம், 26 சுபத்திராள் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

"தேவிகாலோத்ர ஆகமம்—தமிழ் மூலமும், தேவகோட்டை சிவாகம சங்கத்துச் சித்தாந்த சாத்திர போதகர் தூத்துக்குடி திரு. பொ. முத்தைய பிள்ளை அவர்கள் இயற்றிய சித்தாந்த ரத்நமென்னும் விருத்தியுரையும் ஆக 101 பக்கங்கள் கொண்ட இவ்வரிய சித்தாந்த நூலின் விலை அணு 10. உரையாசிரியர் உயர்திரு. முத்தையபிள்ளை அவர்களைப் பற்றியோ அவர்கள் சித்தாந்த சாத்திரப் பயிற்சித் திறத்தைப்பற்றியோ தமிழர்கட்கு, அதிலும், சைவர்கட்கு எடுத்துரைத்தல் மிகையாகும். இத்தகையதோர் உரையை எழுத இவர்களே முற்றிலும் உரியார். வேண்டுவோர் ஆசிரியர் பொ. முத்தையபிள்ளை சிவாகமசங்கம், தேவகோட்டை என்ற இடத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளவும். கழகத்திலும் கிடைக்கும்.

"ராஜேந்திர பிரஸாத்":—திரு. எம். எஸ். சுப்பிரமணிய ஐயர் எழுதியது. அலையன்ஸ் கம்பெனிப் பதிப்பு. விலை அணு 4 கிடைக்குமிடம்: அலையன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

"தமிழ்வடிவ ஆராய்ச்சி":—திரு. அ. சி. சுப்பையா என்பார் இயற்றியது. உயர். திரு. ஈ.வே. இராமசாமி நாய்க்கர் அவர்கள் மதிப்புரையுடன் ஈரோடு பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகத்தாரால் வெளியிடப்பட்டது. விலை அணு 3.

தமிழ் வரிவடிவில் ணா, னா, றா, லை, ளை, னை, ணை, ஈ முதலிய எழுத்துக்கள் வளர்ச்சி முறைக் கொவ்வாதவாறு யாரோ சிலரால் இடைக்காலத்தில் மாற்றியமைக்கப்பட்டிருக்க வேண்டுமென்று புலப்படுவதால் அவற்றை ணா, னா, றா, லை, ணை, னை, என்று எழுதுவதனுல் பல நலங்கள் உண்டாமென இந்நூல் கூறுகிறது. இந்நூலாசிரியர் கூறியபடி இதனைத் தேர்ந்த புலவர் மகாநாடு ஒன்றுகூடி ஆராய்ந்து முடிவுகட்டுதல் சிறந்ததே.

இஃதொரு புறமிருக்க, தமிழின் தனிப்பெருமையையும், பிறமொழிக்கலப்பினுல் அதற்கெய்தக்கடவதாய பெருங்கேட்டையும் அறிய விரும்புவோர் இந்நூலை வாங்கிப் படித்தல் இன்றியமையாததாகும்.

## கதிரைமலைப் பள்ளு

புதிதாக வெளியிடப்பட்ட இந்நூலின் ஒரு பிரதி வரப் பெற்றோம். இது யாழ்ப்பாணத்தில் வழங்கும் மூன்று பள்ளுகளில் காலத்தால் முதன்மை பெற்றது. மற்றைய இரண்டு பள்ளுகளுக்கும் வழிகாட்டியாய் அமைந்தது. பள்ளென்பது இயல் இசை நாடகம் ஆகிய மூன்று இலக்கணங்களைக் கொண்ட ஒரு வகைப் பிரபந்தம். உழத்திப் பாட்டென்றும் பெயர் பெறும். விவசாய சம்பந்தமான நூல். நெல் வகையையும் மீன் வகையையும் பள்ளர்கள் தொழிலையும், நாட்டின் வளப்பத்தையும் விளக்குவது.

இந்நூல் கதிர்காமத்தில் கோயில் கொண்டுள்ள முருகப் பிரான் மேலது. கதிர்காமத்தின் மகிமையை நன்கு தெரிவிப்பது. கதிர்காமத்தின் சிறப்பு என்னவெனின் அது சைவர், வைணவர், பௌத்தர், மகமதியர் முதலிய எல்லோராலும் சாதி மத வித்தியாசமின்றி வணங்கப்படுவதேயாம். நூலில் குறிக்கப்பட்ட திரிகோண மலை, திருக்கேதீச்சரம் முதலிய தலங்களின் வரலாறும் ஆராய்ந்து எழுதப்பட்டுள்ளது. இந்நூல் அழகு பெறப் புதிய முறையில் அச்சிட்டு அரும்பதவுரை ஆராய்ச்சிக் குறிப்பு முதலியவற்றுடன் விளங்குகின்றது. தமிழ் மாணவர்களுக்கும் சரித ஆராய்ச்சியாளர்க்கும் பெரும்பயன் தரத்தக்கது. விலை அணா 12.

பிரதிகள் கழகத்திற் கிடைக்கும்.

## செய்திகளும் குறிப்புகளும்:
## News and Notes

### சைவசித்தாந்த சபை—தூத்துக்குடி

இச்சபையின் 52 ஆம் ஆண்டு நிறைவு விழா, நிகழ் டிசம்பர் 28-29 ஆம் (மார்கழித் திங்கள் 13-14 ஆம்) நாட்களில் நடைபெறும். அவ்விழாவின் பேரவைக்குப் பம்பாய் டிப்டி அக்கவுண்டெண்டு ஜெனரல் சைவத் திருவாளர் T சிவராமசேதுப் பிள்ளையவர்கள் M. A., B. L., I. A. A. S. தலைமை வகிக்க அன்புடன் ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள்.

மதிநுட்பம் நூலோடுடைய அறிஞர் பலர், சித்தாந்தம், தமிழ் இலக்கியம், ஒழுக்க முதலிய பொருள்கள் பற்றிய சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்கள். அன்றியும், சித்தாந்த சைவர்களின் முன்னேற்றம், தமிழ் மொழியின் வளர்ச்சி முதலியவற்றிற்குரிய தீர்மானங்களும் செய்யப்பெறும். அன்பர்கள் அனைவரும் வந்து விழாவினைச் சிறப்பிக்கவும், சொற்பொழிவுகளைக் கேட்டு இன்புறவும் வேண்டுகின்றோம். விபரமான நிகழ்ச்சிக் குறிப்பைக் காரியதரிசிகளிடம் பெற்றுக் கொள்ளலாம்.

---

## நமது கழக வழக்கு முடிபு

### திரு. தி. மாணிக்கவாசகம் பிள்ளையவர்களை அமைச்சர் வேலையினின்றும் நீக்கியது சரியே.

நாளது ஆண்டு டிசம்பர்த் திங்கள் ஆறும் நாள் வெள்ளிக்கிழமை யன்று சென்னை உயர்தர நீதிமன்ற நடுவர் திருவாளர் வேங்கடரமண ராவ் நாயுடுகோரு நமது கழகத்தின்மீது திரு. தி மாணிக்கவாசகம் பிள்ளையவர்கள் தாக்கல் செய்திருந்த் இரண்டாவது அப்பீல் வழக்கில் தீர்ப்பு அளித்தார்கள்.

திருநெல்வேலியில் 1928-ஆம் ஆண்டு மேத் திங்கள் 26-ஆம் நாளில் கூடிய கழகத்தின் விசேட மகா சபையில் கழகக் கூட்ட யாதாஸ்து (Memorandum) 4 வது பாரா 3 வது பிரிவு (C) உட்பிரிவின்படி வாரீசு முறையில் அமைச்சரான திரு. தி. மாணிக்கவாசகம் பிள்ளையவர்கள் 'தகுதியற்றவர்' என்று தீர்மானிக்கப்பட்டு வேலையினின்றும் நீக்கப்பட்டார்கள். அதன் மேல் திரு. தி. மா. அவர்கள் திருநெல்வேலி ஜில்லா முனிசீப் கோர்ட்டில் வழக்குப் பதிவு செய்து மேற்படி உட்பிரிவின்படி தம்மைக் கழகத்தினர் நீக்குதற்கு உரிமை கிடையாது என்று வாதாடினார்கள். 20-6-1930-ல் ஜில்லா முனிசீப் திரு. R. வேம்பு அய்யரவர்கள் திரு. தி மா. அவர்களைத் தகுதியற்றவர் என நீக்கியது சரியே என்று செலவுத் தொகைகளுடன் வழக்கினைத் தள்ளிவிட்டார்கள். பின்பு திருநெல்வேலி சப் கோர்ட் அப்பீல் வழக்கிலும் சப் ஜட்ஜ் திரு. இரவி வர்ம ராஜா அவர்கள் முனிசீப்கோர்ட்டுத் தீர்ப்பினை செலவுத் தொகைகளுடன் உறுதி செய்தார். பின்னர் உயர்தர நீதி மன்றத்தில் 30-11-31-ல் தாக்கல் செய்யப்பட்ட இரண்டாவது அப்பீல் வழக்கிலும் கீழ்க்கோர்ட்டின் தீர்ப்பு உறுதி செய்யப்பட்டு வழக்கு செலவுத்தொகைகளுடன் தள்ளப்பட்டது.

---

222



திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை
பி.ஏ., எல்.டி.



திரு. வி. கலியாணசுந்தர
முதலியார்